பக்கங்கள்: 14

Registered as a Newspaper

★ காஞ்சிபுரம்
★ பெனரிஸ்
★ கெவி தஞ்சூர்
★ பாட்லி
★ பட்டுவேஷ்டிகள்

மற்றும் சகலவிதமான
பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும்

ராசி சில்க்ஸ்
நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை
ரூ2/50

மங்கள வைபவங்களுக்
கேற்ப, உடுபுடைவைகள்

ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 சுக்கில ஞு சித்திரை மீ 01 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 றமழான் பிறை 07 (14 - 04 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-109

# நேரடிப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு விடுதலைப் புலிகளுக்கும் அழைப்பு

## இலங்கை அரசாங்கம் நேற்று உத்தியோகபூர்வமாக விடுத்தது

கொழும்பு, ஏப்ரல் 14

நேரடிப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இலங்கை அரசாங்கம் நேற்று அழைப்பு விடுத்துள்ளது.

இதேபோன்ற அழைப்பு மக்கள் விடுதலை முன்னணிக்கு ஏற்கனவே விடுக்கப்பட்டது தெரிந்ததே.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் விரும்பினுல், ஏனைய அரசியல் கட்சிகளின் தலைவர்களும் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளலாம்.

இதுதொடர்பாக வெளியுறவு அமைச்சரும் பாதுகாப்புத் துணைஅமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்ன அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

இந்த மாதம் 11ஆம் திகதி ஜனுதிபதிக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவினுல் அனுப்பி வைக்கப்பட்டதாகக் கருதப்படும் பகிரங்கக் கடிதம் ஒன்றைப்பற்றியும் அரசு கவனத்துக்கு எடுத்துள்ளது.

ஜனுதிபதி விடுத்த வேண்டுகோளைத் தவருகப் புரிந்துகொண்டுள்ளதுபோல் தென்படுகிறது.

மக்கள் விடுதலை முன்னணியின் அறிக்கைக்கு நான் அளித்த பதிலைப்போன்று ஜனுதிபதியின் நேர்மை அவரது வேண்டுகோளில் தெளிவாகத் தென்படுகிறது.

இந்த நாட்டில் உள்ள சகல இன மக்கள் மத்தியிலும் அமைதி, நல்லெண்ணம் ஒற்றுமை ஏற்படுத்துவதில் மாத்திரம் அரசு அக்கறை கொண்ளது.

இலங்கையில் இருந்து இந்திய அமைதிப் படையை வாபஸ் வாங்கச்செய்வதே இந்திய — இலங்கை அரசுகளின் விருப்பம்.

இதைத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் உணர்ந்துகொள்வார்கள் என்று

[14ஆம் பக்கம் பார்க்க]

### புதன்கிழமை தோறும் பொதுமக்கள் தினம்

சகல அரசு அலுவலகங்களும்ஒவ்வொரு புதன்கிழமையையும் பொதுமக்கள் தினமாக அனுஷ்டிக்க வேண்டும் என்று பொது நிர்வாக அமைச்சுச் செயலாளர் உத்தரவிட்டுள்ளார்.

இது சம்பந்தமான சுற்று நிருபம் அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரசு அதிபர் அலுவலகங்கள், பிரதேச உதவி அரச அதிபர் அலுவலகங்கள் மற்றும் மாகாண அமைச்சுக்கள் ஆகியவற்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. (இ-எ)

முச்சந்தி முரளி



வருக, வருக சுக்கில புத்தாண்டே வருக!



வாசகர்கள், விளம்பரதாரர்கள், விநியோகஸ்தர்கள், அபிமானிகள், ஆதரவாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும் உதயனின் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.
புதுவருட சோபனங்கள் பொலிக!
எங்கும் மங்களம் தங்குக!!

### சிறந்த இசையமைப்பாளர் இளையராஜா

புதுடில்லி, ஏப்ரல் 14

தேசிய திரைப்பட விருதுகள் பெற்றவர்களை நேற்று மத்திய அரசு அறிவித்தது.

சிறந்த படம்; ''சிறகு'' (மலையாளம்)

சிறந்த பின்னணிப்பாடகர்: எஸ்.பி. பாலசுப்பிரமணியம்.

சிறந்த பின்னணிப் பாடகி; சித்ரா

சிறந்த இசையமைப்பாளர்: இளையராஜா. (ருத்ரவீணு—தெலுங்கு] [ஓ-எ]

### புதுவருடக் கருமம்

புதிய சுக்கில வருடம் நேற்று வியாழக்கிழமை மாலை 6-57 மணிக்குப் பிறந்துவிட்டது.

விஷு புண்ணிய காலம் அன்று பிற்பகல் 2–57 மணி முதல் ஆரம்பித்து இரவு 10–57 வரை நீடித்தது.

இன்று வெள்ளிக்கிழமை, சுக்கில வருடம் சித்திரை மாதம் முதலாம் திகதி, காலையில் சூரியோதயத்தின் முன் நித்திரை விட்டெழுந்து, காலைக் கர்மானுஷ்டானங்களைச் செய்து, ஆலய தரிசனம் செய்து, தத்தம் வீடுகளில் சூரியனுக்குப் பொங்கிப் படைத்து பூசை, வழிபாடுகள் இயற்றி போசனமுண்டு, சுற்றம் சூழ மகிழ்ந்திருக்கலாம்.

கைவிசேஷம்:

சித்திரை இரண்டாம் திகதி
சனிக்கிழமை [15-4-89]
1. மாலை 4-23 முதல் 5-54 மணிவரை.
2. இரவு 8–16 முதல் 9–04 மணிவரை.

சித்திரை நான்காம் திகதி
திங்கட்கிழமை [17-4-1989]
1. மாலை 4–13 முதல் 5-43 மணிவரை.
2. இரவு 12–27 முதல் 1–15 மணிவரை.

# திருகோணமலையில் குண்டு வெடிப்பு
## 45 பேர் உயிரிழப்பு; 54 பேர் காயம்

திருகோணமலை, ஏப்ரல் 14

திருகோணமலையில் நேற்றுக் காலை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 45 பேர் உயிரிழந்தனர் 54 பேர் காயமடைந்தனர்,

நகரில் ஏகாம்பரம் வீதி, மத்திய வீதி, டொக்யார்ட் வீதி ஆகியன சந்திக்கும் இடத்தில் மணிக்கூண்டுக் கோபுரம் உள்ளது.

அதற்கு அருகில் இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

அந்த இடத்தில் கார் ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது என்றும் அதனுள் வைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஒருமாடிக் கட்டடம் இடிந்து விழுந்ததனுல் அதனுள்ளும் பலர் சிக்கிக்கொண்டனர்.

இடிபாடுகளுக்கு இடையே இருந்து 38 சடலங்கள் பின்னர் மீட்டெடுக்கப்பட்டன.

படுகாயங்களுக்குள்ளான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட 20 பேரில் 7 பேர் பின்னர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் சிங்களச்சிவிலியன்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பழிவாங்கும் செயலில் சிங்களவர் ஈடுபடாமல் இருப்பதற்காக சிங்களப் பகுதிகளில் இருந்து அவர்கள் வெளியேருமல் தடுக்கப்பட்டுள்ளதாக பி.பி.சி நேற்றுத் தெரிவித்தது.

சிங்களப் பகுதிகளை இலங்கை இராணுவத்தினர் சீல் வைத்துவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதே ைகுண்டு வெடிப்புச் சம்பவத்தை நேரில் பார்வையிட வெளியுறவு அமைச்சரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான ரஞ்சன்

[14ஆம் பக்கம் பார்க்க]

### ஊரடங்கு

திருகோணமலை, ஏப் 14

திருகோணமலை நகரில் முழுநேர ஊரடங்கு உத்தரவு உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

ஐந்து கடைகள் தீக்கிரை ஆனதுடன் வேறுபல கடைகள் இடிந்து விழுந்தன.

### ஷெல் வீச்சு

ஒட்டுசுட்டான், ஏப்ரல் 14

கடந்த புதன்கிழமை இரவு குமுழமுனைப் பகுதியிலிருந்து ஷெல்வீச்சு நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

ஆண்டான்குளம், நித்திகைக்குளம் பகுதிகளை நோக்கியே ஷெல்கள் ஏவப்பட்டன. (ஓ-113)

### 9 மாதங்களின் பின்னர் விடுதலை

ஒட்டுசுட்டான்,ஏப்ரல் 14

இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு மாங்குளம் முகாமில் கடந்த ஒன்பது மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த கற்சிலைமடுவைச் சேர்ந்த ம. சந்திரன் விடுதலை செய்யப்பட்டார். [ஓ-113]

### கைப்பற்றினர்

பம்பாய், ஏப் 14

பம்பாயில் நேற்று பொலிஸார் 21 கிலோகிரும் பிரவுன் சுகரைக் கைப்பற்றினர்.

இதன் பெறுமதி இந்தியப் பணத்தில் 21 கோடி ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது. [ஓ-எ]

## மக்கள் தொண்டர் படையின் அணிவகுப்பு வைபவம்

### 250 பேர் பயிற்சி முடிந்து வெளியேறினர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 14

புதிதாகத் திரட்டப்பட்ட மக்கள் தொண்டர் படையின் முதலாவது தொகுதியினர் பயிற்சி முடிந்து வெளியேறும் அணிவகுப்பு வைபவம் நேற்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

மொத்தம் 250 மக்கள் தொண்டர்படையினர்நேற்று பயிற்சி முடிந்து வெளியேறினர்.

மக்கள் தொண்டர் படையின் கொமாண்டரும் வடக்கு—கிழக்கு மாகாண சிரேஷ்ட பொலீஸ் அதிபருமான திரு. ரி.ஏ.ஆனந்தராஜா வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பொலீஸ் சுப்பிரிண்டன் திரு. கே. சற்குணராசா பலாலியிலுள்ள ஸ்ரீலங்கா இணைப்பதிகாரி பிரிகேடியர் பாலரத்தினராஜா மற்றும் இந்திய அமைதிப் படையின் உயர் அதிகாரிகள் உட்பட பலர் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

சிரேஷ்ட பொலீஸ் அதிபர் திரு. ஆனந்தராசா வைபவத்தில் பேசுகையில் மக்கள் மன

[14ஆம் பக்கம் பார்க்க]

### சுபநேரம்

14 - 4 - 1989

சித்திரை 1. வெள்ளிக்கிழமை
சுபநேரம்;
6.05 முதல் 7.35 வரை
ராகுகாலம்:
10.35 முதல் 12.05 வரை
ஸ்ரீராம நவமி
புதிய சுக்கில வருஷப் பிறப்பு

### சஞ்சீவி நாளை வரும்

புத்தாண்டை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை ''உதயன்'' நிறுவனப் பணியாளர்களுக்கு விடுமுறை ஆகும்.

எனினும் ''சஞ்சீவி'' வார இதழ் வழமைபோல் வெளிவர ஏற்பாடாகி உள்ளது.

சஞ்சீவிக்கு மரண அறிவித்தல்கள் தவிர்ந்த ஏனைய விளம்பரங்கள் இன்று ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

ஞாயிற்றுக் கிழமை (16-4-1989) உதயனும் வழமைபோலப் பிரசுரிக்கப்படும்.

— நிர்வாகிகள்

## வவுனியா பகுதியில் கண்ணி; 10 அமைதிப்படையினர் பலி

கொழும்பு, ஏப்ரல் 14

வவுனியாப் பகுதியில் புதன்கிழமை இரவு இடம்பெற்ற நிலக்கண்ணிவெடித் தாக்குதலில் இந்திய அமைதிப்படையினர் பத்துப்பேர் கொல்லப்பட்டனர் என்று பி. பி. சி. வானெலி அறிவித்தது.

இந்திய அமைதிப்படையினர் சென்ற டிரக் ஒன்று நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலக்கண்ணிவெடியில் சிக்கியது. அதைத் தொடர்ந்து மறைந்து இருந்த தீவிரவாதிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். (இ-எ-164)

★ நண்பர்கள்
★ வாடிக்கையாளர்கள் மற்றும் எல்லோருக்கும்
எமது மனங்களிந்த

இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!

மலரட்டும் புதிய ஈழம் மலரட்டும்
மணம் பரப்பட்டும்

தங்க நகைகளை விற்க நினைத்திடும் போது
தவருமல் நீங்கள் நாடவேண்டிய
★ தனியார் வர்த்தக நிறுவனம் ★

நியூ ஈழம் ஜுவல்லரி மாட்
இல: 423. (247) கே. கே. எஸ் வீதி,
சிவன் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

(நகை வியாபாரம் செய்யும் வர்த்தகர்களே நகைகள் செய்யத் தேவைப்படும் பவுண்களை எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்)

[சி-2089]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வான் கோழிக் குஞ்சுகள் தாராக்குஞ்சுகள் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; எ. பா. உமாபதி, மீனாட்சி அம்மன் வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி. (128)

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Dekalb) பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், (19-4-89) புதன்கிழமையும் (பிலிமக்) கறுப்பு சேவல் குஞ்சுகள் (18-4-89) செவ்வாய்க் கிழமையும் சகாயவிலைக்கு விநியோகிக்கப்படும். தடுப்பூசி போடப்பட்டது. இல. 9, சுந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்) (134)

### இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக்கோழிகள், சேவற்கோழிகள், குப் குஞ்சுகள், விருத்துக்குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் விற்பனை செய்யப்படும். 10728)

### காணி விற்பனை

மிருசுவில் கண்டி றோட்டில் 12 1/2 பரப்பு தென்னந் தோட்டம் துண்டாகவோ, முழுவதுமாகவோ விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: 50, ஸ்ரீ வெங்கடேசன் வீதி யாழ்ப்பாணம். (10515)

### கொங்கிறீற் கற்கள் விற்பனை

4'' கனம் கொங்கிறீற் கற்கள் தரமான முறையில் கலந்து அரிந்து நீரில் பதப்படுத்தப்பட்டவை விற்பனைக்கு உண்டு. பெரிய ஓடர்கள் 4'' 5'' கனம் 3'' கற்களுக்கு ஏற்கப்படும். ஆனந் பண்ணை கட்டுவன் வீதி, மயிலிட்டி. (10545]

### புத்தகம்

''நான்'' வெளியீட்டு வரிசையில் T. M. அன்ரனிப்பிள்ளை L.L.B. எழுதிய ''Easy English'' [இலகுவான ஆங்கிலம்] பகுதி III வெளிவந்துள்ளது. ஆங்கிலத்தை இலகுவாக கற்பதற்கு துணை நூலாக பகுதி I (தமிழில் விளக்கத்துடன்), பகுதி II [இலக்கண விளக்கத்துடன்] பகுதி II வினாவிடைகளுடன் கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, வஸ்தியன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (144)

### விசேட கழிவு

சுக்கில வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் திருக்கணித பஞ்சாங்கம் எம்மிடம் தொகையாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். கூடுதலாக வாங்குவோருக்கும், வியாபாரிகளுக்கும் விசேட கழிவு. விற்பனையாளர்: மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (C/1574)

### தேவை

கொழும்பில் தலைமையகத்தைக் கொண்ட பிஸ்கட் பைக்கிங் சென்ரருக்கு விற்பனைப் பிரதிநிதியாகவும், பைக்கட்டிங் செய்பவராகவும், யாழ்ப்பாணத்தில் கடமையாற்றுவதற்கு பெண்பிள்ளைகள் தேவை. உடன் சமுகம்தரவும். விலாசம்: 144/2, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். (140)

யாழ்நகரிலுள்ள பிரபலமான நகைக்கடை ஒன்றுக்கு சகல நகைவேலைகளும் தெரிந்த நகைத் தொழிலாளி ஒருவர் தேவை. விண்ணப்பதாரர் பிணைப்பணம் செலுத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும். முழுவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும். 484, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (124)

உதவிஏஜெண்டுகள் - பெண்கள் மாதம் ரூபா 1600-2400 வரை கொமிஷனுக பெறவழி உண்டு. எவரும் விண்ணப்பிக்கலாம். நேரில் ஆபீஸ் வந்து விபரங்களைப்பெற்றும், பெயர்களைப் பதிவு செய்யலாம். ராஜா ஜூர்ஸ், 168/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (119)

### தேவை

கிளிநொச்சி கண்டி வீதியில் அமைந்திருக்கும் பிரபல ஓட்டல் ஒன்றிற்கு அனுபவம் வாய்ந்த ரொட்டி தயாரிப்பாளர்கள். இடியப்பம் தயாரிப்பாளர்கள், வெயிட்டர்கள் உடனடியாகத் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்க்கலாம். விபரங்களுக்கு: லூட்லண்ட்ஸ் டி ஹோட்டல், கண்டி வீதி, கிளிநொச்சி. (10537)

### வகுப்புக்கள்

கேக் ஐசிங், ஜென்றல் குக்கரி பிரத்தியேகமான செய்முறைப் பயிற்சியுடன் பயிற்றுவிக்கப்படும். வெளிநாடு செல்வோருக்கும், இல்லத்தரசிகளுக்கும் சிறந்த ஒரு வரப்பிரசாதம். சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் ஆரம்பம்: 22.04.1989 தொடர்பு: N Arullananda, 11/2, Wyman Road, Nallur. [C/2260]

### ஆங்கிலம்

G. C. E. (A/L English Literature, G. C. E. (O/L) English, General English ஆகிய வகுப்புகளின் புதிய பிரிவுகள் 15. 4. 89 ஆரம்பமாகின்றன. 8 ஆம், 9 ஆம், 10 ஆம் ஆண்டு வகுப்புகளுக்கு இரண்டொரு இடங்களே உண்டு. கோவிந்தபிள்ளை ஜெயக்குமார், 218, பலாலி றோட், கந்தர்மடம். (10553)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும். தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [C/2124]

### மாறிய சூட்கேஸ்

11-04-1989 வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வந்த மினி பஸ்சில் இருந்து கொடிகாமத்தில் இறங்கும்போது சூட்கேஸ் மாறி எடுக்கப்பட்டு விட்டது. எமது சூட்கேஸ் யாரிடம் உள்ளதோ அவர்கள் S. சாமிக்குருக்கள் இந்திரன், அம்மன் கோவிலடி, துன்னாலை வடக்கு கரவெட்டி என்னும் முகவரியில் மாற்றி பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். (142)

### உங்கள் சேவை

மூன்று மொழிகளில், றபர் ஸீல்கள், பிளாஸ்டிக் பெயர்கள், விளம்பர போட், இரெக், ஸ்கூல் பட்ஜ் யாவும் உடன் செய்துகொள்ள 'அலன் றபர் ஸீல்' 40A, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம். குறிப்பு: வேலைகள் பயில ஆர்வமுள்ள பெண்கள் விண்ணப்பிக்கவும். (10520)

### ஐந்தாவது ஆண்டு நினைவஞ்சலி



க. அ. சுதீஸ்குமார்

அன்னை மடியில்

12 - 03 - 1967

ஆண்டவன் அடியில்

13 - 04 - 1984

ஐந்தாண்டு அலர்ந்து
மறைந்ததுவே
சுதீஸ்குமாரா
முந்திப் பிறந்தவெம்
முத்தே - சிந்துமெம்
கண்ணில் துடைக்க
கடுகிநீ வாராயோ
மண்ணில் மற்றொருக்கால்
நயந்து.

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
உன்பிரிவால் துயருறும்:
ஐயா, அம்மா, டலா, மம்மி, தம்பிமார், அத்தான், அக்கா, மருமகன்மார், உற்றார், உறவினர்

சுதுமலை மத்தி,
மானிப்பாய்.

(29)

### 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் மாணிக்கம் தர்மலிங்கம்**

[பாதுகாப்பு உத்தியோகத்தர் யாழ். பல்கலைக்கழகம்]

தோற்றம்: 1960 - 01 - 22 மறைவு: 1988 - 04 - 14

ஓடி மறைந்ததடா ஓராண்டு காலம்
ஓயாதுன் பிரிவுத் துயரமென் நாளும்
சடமை முடியக் காலனுனை யழைத்த
காரணத்தை நாமறியாக் கவலையிலே வாழ்கின்றோம்

ஏக்கமொடு கவலைசளை நெஞ்சில் சுமந்து
ஏங்கித் தவிக்கின்ற நண்பரையும் மறந்து - நீ
தனிமையிலே சென்றுண்டு ஒன்றல்ல பலவாணுலும்
தருமனெனும் நாமமென்றும் எம்முடனே வாழும்.

பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்
பாதுகாப்புத் திணைக்களம்
யாழ் பல்கலைக்கழகம்.

(136)

✶ எமது புதிய வெளியீடுகள் ✶

1. ராஜபார்ட் ரங்கதுரை - ('Esquire')
2. தப்புத்தாளங்கள் - ('Pyramid')
3. குமரிக்கோட்டம் - ('Pyramid')
4. கல்யாணப் பரிசு - ('Pyramid')
5. அன்னக்கிளி - ('Eeknath')
6. நீர்க்குமிழி - ('Eeknath')
7. பல்லாண்டு வாழ்க - ('Eeknath')
8. மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் - ('Vijay Video')
9. பட்டிக்காட்டுப் பொன்னையா ('Circuit India')
10. Captive Rage - (War)
11. Striker - (War)

அடுத்த வெளியீடு:
எம். ஜி. ஆரின்

**காலத்தை வென்றவன்**

**குணம் வீடியோ சென்ரர்**

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம.
தொலைபேசி: 23665 (சி/2202)




## தேவை

டாக்டருக்கு அனுபவமுள்ள நர்சுகள், டிஸ்பென்சர், லாபரட்டரி டெக்னிசியன் ஆகியோருடன் ஒரு வயதான சாரதியும் தேவை, விண்ணப்பிக்கவும்.

இல. 47 C/o உதயன் (10345)

## வேலை வாய்ப்பு

### சவூதி அரேபியா

**களஞ்சிய சுத்திகரிப்பாளர்**
**WAREHOUSE CLEANERS**

சம்பளம் - 775 SR (7000/-)
உணவு இல்லை
O. T. உண்டு
3 வருட ஒப்பந்தம்

ஒரு மாதத்துக்குள் அனுப்பிவைக்கப்படும் பாஸ்போட்- 5 போட்டோக்களுடன் சந்திக்க வேண்டிய இடங்கள்:

(1) சிவா மாஸ்ரர், ஏழாலை தெற்கு.

(2) V.யோகலிங்கம், கச்சாய் வீதி, சாவகச்சேரி.

(3) Link International 42 Clock Tower Rd. (மணிக்கூட்டு வீதி) யாழ்ப்பாணம்.

(சி/2665)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் புத்தாண்டுச் சிறப்பிதழ்

## நாட்டுக்கு நாடு இனத்துக்கு இனம் மாறுபடும் புத்தாண்டு கொண்டாட்டம்

- பேராசிரியர் அ. சண்முகதாஸ் -

மனிதன் புதிதாக எதனையுஞ் சாதித்தால் அதனைக் கொண்டாடும் வழக்கம் பண்டைக்காலம் தொடக்கம் இருந்து வந்துள்ளது.

முதன் முதல் ஆயுதமேந்தும் பொழுது, முதன் முதல் வேட்டைக்குப் போகும் போது, முதல் மிருகத்தை வேட்டையிலே வீழ்த்தும் போது, முதன் முதல் கப்பல் கடலிலே செலுத்தப்படும் போது, முதன் முதல் வயலை உழுது விதைக்கும்பொழுது, முதன் முதல் கதிர்களை அரியும்போது என்று இப்படியான சந்தர்ப்பங்களிலே கொண்டாட்டங்களும் விழாக்களும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

புது விதைப்புக்கு வயலிலே நடைபெற்ற கொண்டாட்டம் அடுத்த தடவை நிகழும் போது ஏற்படும் கால மாற்றங்களை அனுசரித்து காலக் கணிப்புகள் செய்தனர். இத்தகைய பின்னணியிலேயே புத்தாண்டு பற்றிய எண்ணமும் அதனைக் கொண்டாடும் வழக்கமும் தோன்றின.

### இனங்களும் புத்தாண்டும்

பண்டைய நாகரிகம் மலர்ந்த மெசப்பத்தேமியாவில் புத்தாண்டு விழாவினை 'அக்கித்த' விழா என்பர். வயல்களுக்கு மத்தியிலே சிறப்பாக இதற்கென நிர்மாணிக்கப்பட்ட கோயிலிலே இவ்விழாக் கொண்டாடப்பட்டது. அவர்களுடைய நிஸன் மாத (மார்ச்-ஏப்ரல்) முதல் திகதியிலேயே புத்தாண்டு விழாக் கொண்டாடப்பட்டது. கால மாற்றத்துடனும் வளப்பெருக்கத்துடனும் புத்தாண்டு விழா தொடர்புடையதாயிருந்தது என்பதை இத்தகவல் உறுதிப்படுத்துகின்றது.

புத்தாண்டு எந்த மாதத்தில் எந்தத் திகதியில் பிறக்கின்றது என்பதை நோக்கினால் சுவையான பல தகவல்களை அறியக்கூடியதாயுள்ளது. உரோமானியர் மார்ச் முதலாம் திகதியினையே புது வருடப் பிறப்பு நாளாக முதலிலே கொண்டனர். பின்னர் ஜனவரி முதலாந் திகதியாக மாற்றிக்கொண்டனர்.

யூதர்கள் 'திஸ்றி' என அழைக்கப்படும் அவர்களுடைய மாத (செப்டம்பர்—ஒக்டோபர்) முதல் திகதியிலே புத்தாண்டு விழாக் கொண்டாடினர். ஐரோப்பியக் கிறிஸ்தவர்கள் ஆரம்பத்தில் மார்ச் மாதம் இருபத்தைத்தாம் திகதியினையே புத்தாண்டு முதல் நாளாகக் கொண்டனர். அங்ளோ-சக்ஸன் (Anglo Saxon) கால இங்கிலாந்தில் டிசம்பர் 25ஆம் திகதியே புத்தாண்டு நாளாகக் கொள்ளப்பட்டது.

இவ்வாறு பல புத்தாண்டு நாட்கள் இருந்து வரும் பொழுது 1582 இல் கிரகோரியன் கலண்டர் அறிமுகஞ் செய்யப்பட்டது. இதன் படிக்கு ஜனவரி முதலாம் திகதியே புத்தாண்டு பிறக்கும் நாளாகக் கொள்ளப்பட்டது. ஒன்றன்பின் ஒன்றாக எல்லா நாடுகளும் இத்தினத்தையே புத்தாண்டாகக் கொண்டனர்.

### யப்பானில் சின்னப் புத்தாண்டு

யப்பானில் ஜனவரி மாதம் 15ஆம் திகதியையே புத்தாண்டுத் தினமாகப் பண்டைக் காலத்திலே கொண்டாடினர். பின்னர் சீன நாட்கணிப்பு அறிமுகஞ் செய்யப்பட்ட பொழுது ஜனவரி 1 ஆம் திகதியைப் புத்தாண்டுத் தினமாகக் கொண்டாடி வருகின்றனர்.

எனினும் ஜனவரி 15 ஆம் திகதியை 'சின்னப் புத்தாண்டு' (Little New Year) எனக் கொண்டாடி வருகின்றனர். அஸுகிப் பயறும் அரிசியும் சீனியும் சேர்த்துப் பொங்கலிடும் வழக்கமும் இக் கொண்டாட்டத்தில் ஓர் அம்சமாக இருந்து வந்துள்ளது.

சாதாரண வழக்கத்தில் ஆண்டு எனப்படுவது பூமி சூரியனை ஒரு முறை சுற்றிவர ஆகும் காலம். வானவியலில் பல முறைகளிலே ஆண்டொன்றினைக் கணக்கிடுவர். சூரியன் பூமத்திய ரேகைக்கு உச்சமாக இருந்து வடக்குப் பக்கத்தில் சஞ்சரிக்கும் ஆறு மாதங்களும், திரும்பவும் பூமத்திய ரேகைக்கு உச்சமாக இருந்து தெற்குப் பக்கத்தில் சஞ்சரிக்கும் ஆறு மாதங்களும் சேர்ந்து ஓர் ஆண்டாகக் கொள்ளப்படும். இது ஒரு சூரிய ஆண்டு எனப்படும். இதுவே சாதாரணமாக வழக்கிலுள்ளது.

### சித்திரைப் புத்தாண்டு

இந்துக் காலக் கணிப்பில், சூரியன் மேடராசியிற் பிரவேசித்தது முதல் பன்னிரண்டு இராசிகளையும் கடந்து மறுபடி மேடத்தில் பிரவேசிக்கும் வரையுள்ள காலம் சூரிய ஆண்டு எனக் கொள்ளப்படும்.

தமிழ்நாட்டில் மேடம் முதல் மீனம் ஈறாகவுள்ள சூரிய மாதங்களுக்குச் சித்திரை முதல் பங்குனி ஈறாகவுள்ள பெயர்கள் வழங்கப்படுகின்றன. எனவே, இக் கணிப்பின்படி சித்திரை மாதத்திலேயே புதிய ஆண்டு தொடங்குகின்றது இம்மாதத்தின் முதல் திகதியே (April 14) புத்தாண்டுத் தினமாகவும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

பண்டைத் தமிழர் புத்தாண்டுத்தினமாக எந்நாளைக் கொண்டனர் என்பதற்குச் சங்க இலக்கியங்களிலே நேரடிச் சான்றுகள் இல்லை. ஆனால், சித்திரை மாதம் பற்றிய குறிப்பு எதுவும் சங்கப் பாடல்களிலே இடம்பெறவில்லை எனத் துணிந்து கூறலாம். சிலப்பதிகாரம்(5: 64) என்னும் இலக்கியத்திலேயே சித்திரை மாதம் பற்றிய குறிப்பு முதலிலே இடம் பெறுகின்றது.

சங்கப் பாடல்களிலே தை மாதம் பற்றிய குறிப்பு சில பாடல்களிலே இடம் பெற்றுள்ளது:

'தைஇத் திங்கள்
தண்கயம் படியும்
பெருந்தோள் குறுமகள்...'
(நற்றிணை : 80)

'தாயருகா நின்று
தவத்தை நீராடுதல்'
(பரிபாடல்)

'வான்பெயல் நனைந்த
புறத்த நோன்பியர்
தையூ ணிருக்கையில்
தோன்று நாடன்'
(நற்றிணை: 22)

சங்ககாலத் தமிழர்களுக்குத் தைமாதம் சிறப்பானதொரு மாதமாக இருந்திருக்கவேண்டும். இதுவே அவர்களுடைய புத்தாண்டு மாதமாகவும் இருந்திருக்க வேண்டுமோ வென ஊகிக்கவும் இடமுண்டு.

### காலநிலையும் புத்தாண்டும்

ஆனால், பிற்காலத்தில், தமிழ்நாட்டின் காலநிலைகள், பயிர் விளைச்சல் என்பன வற்றை நோக்கி சித்திரை மாதப் பிறப்பு புத்தாண்டுத் தினமாகக் கொள்ளப்பட்டிருக்கலாம். நெல் விளைந்து அறுவடை முடிந்த காலத்திலேயே சித்திரை பிறக்கின்றது. வீட்டிலே நெல்வளம் பெருகியிருக்கும் காலத்திலே கொண்டாட்டம் நடத்துவது பொருத்தமானதே.

தை மாதத்தில் தொடங்கிய சூரிய வெப்பம் சித்திரை மாதப் பிறப்புடன் தொடங்கும் காற்றினாலே சிறிது தணிக்கப்படுகின்றது; முக்கனிகளுள் முதலிருகனிகளாகிய மா, பலா ஆகியன பூத்துக் காய்க்கத் தொடங்குகின்றன; வசந்தகாலத்தை அறிவிக்கும் பறவை எனப்படும் குயில் கத்தும் ஓசை காதிலே கேட்கத் தொடங்கும்; வெண்மையாக அனல் கக்கிக் கொண்டிருந்த வானம் சித்திரம் பெறத் தொடங்கும்.

இத்தகைய காரணிகளாலே சித்திரை மாதப் பிறப்பு சிறப்பான வரவேற்பைப் பெற்றதுடன் புத்தாண்டுத் தினமாகவும் கொண்டாடப்பட்டு வருகின்றது. திருஞானசம்பந்தப்பெருமான் பாடிய பூம்பாவைப் பதிகத்திலே தைப் பூசம், திருவோணம், பங்குனி உத்தரம் ஆகிய பெருவிழாக்கள் குறிப்பிடப்படுகின்றன. அவற்றுள் சித்திரை வருடப் பிறப்புப் பற்றிக் கூறப்படவில்லை என்பதும் சிந்தனைக்குரிய தொன்றாகும். ★

### சுக்கில ஆண்டே நீ சுகமதனைத் தந்திடுவாய்

விபவ ஆண்டினிலே
விபத்துக்கள் பலவாகி,
வீரமிகு இளைஞர்களை
வீணே இழந்து நின்றோம்,
சுதந்திரமாய் வாழ்வதற்கோ
விடிவெள்ளி தோன்றவில்லை,
சுக்கில ஆண்டே நீ
சுகமதனைத் தருவாயா?

நாட்டினிலே நல்லதில்லை
வீட்டிலுமோ வேதனைதான்!
நாடும் உயர்ந்துநிற்க
நாமும் நிமிர்ந்து நிற்க
சுதந்திரமாய் வாழ்வதற்கும்
கூடி மகிழ்வதற்கும்,
சுக்கில ஆண்டே நீ
சுகமதனைத் தருவாயே!

ஆண்டவனை அடிவணங்கி
ஆர்வமுடன் வேண்டுகின்றோம்
ஆண்டிறுதி முடிவடைந்து
ஆண்டொன்று பிறக்கையிலே
சுற்றத்தார் வாழ்வதற்கும்
உற்றோர் மகிழ்வதற்கும்
சுக்கில ஆண்டே நீ
சுகமதனைத் தந்திடுவாய்.

-வண்ணை. சே. சிவராஜா


ஓங்குக உண்மை பெற்றிடுக நன்மை!
எமது வாடிக்கையாளர்களுக்கும்
நண்பர்களுக்கும்
இதயம் கனிந்த
புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்



ரவி அன் ராஜ்
சில்க்ஸ்
77, பெரியகடை, 'ரகுராமன் பில்டிங்'
யாழ்ப்பாணம்.

நவீன நாகரிகத்திற்கேற்ற வெளிநாட்டுத் துணிவகைகள், திருமணத்திற்கான இந்திய பட்டுச்சேலைகள், றெடிமேட் சேட், ட்ரவுசர், ஜப்பான் சேலைகளும்
உங்கள் மனத்திருப்தியுடன் தேர்ந்தெடுக்கச் சிறந்த ஸ்தாபனம்

Ravi and Rajh Silks
77, Grand Bazaar, 'Ragu Raman Building,
Jaffna.
தொலைபேசி: 22378: (C/1098)




(படப்பிடிப்பு - எஸ். சர்வானந்தர்)

### எதிர்பார்ப்பு

போயிற்று விபவ ஆண்டு
புகுவதோ புதிய ஆண்டாம்!
ஞாயிற்றைச் சுற்றிப் பூமி
ஒருமுறை வளைந்ததென்றே
ஆய்வுக்காய் வாழும்
வானூல் அறிஞர்கள்
சொல்லக்கூடும்.

ஓய்வுக்கோர் திருநாள் என்றோம்
உண்மையில், விழாத்தான் நோக்கம்

கொண்டாட்டம் தானே
எந்தக் குடிலிலும் — இந்த நாளில்?
பெண்டுகள் தாம்பூலத்தைப்
பிறருக்கும் கொடுத்து,
தாமும் சொண்டுகள் சிவந்து போனார்
சூடிய பூவின் வாசம்
கொண்டையிலிருந்து வந்து
குழைந்தது — பரந்து நீந்தி

இதுவரை நடந்ததெல்லாம்
என்னவோ — திருப்தி இல்லை
அதற்கென்ன?
'இனி என்றாலும்
அகலுமோ தொல்லை?' என்னும்
புதியதோர் ஐயம் தோய்ந்த
ஆசையினாலே தானே,
இதமான பொழுதாய்
இந்தப் புத்தாண்டை
எதிர்பார்க்கின்றோம்!

- கவிஞர் முருகையன் -

## அசைக்க முடியாத ஒருமையுடன் இறைபக்தியில் ஈடுபடுவோமாக!

நாடு முழுவதும் நலங் கொழிக்க நல்ல சுக்கில ஆண்டே வருகவென வாயார வாழ்த்தி வரவேற்போம். சோதிடம் தரும் பலனை ஆராயப்புகின், நன்மை பெறுஞ் சுக்கிலத்தினால் நாடெங்குமே செழிக்கும். உலக மக்கள் அனைவரும் தன்மக்களோடு கூடச் சுகமாய் வாழ்வர். ஆனால் அரசாள்வோர் ஒருவருக்கொருவர் வெற்றியடைய விருப்புள்ளோராய்ப் போரிடுவர். எனவே நற்பலன் இரண்டு பங்கும் தீயபலன் ஒரு பங்குமாம். வாழ்க்கையில் ஒன்றுமே நிலைக்காது துன்பத்துக்குப் பின் இன்பம். இப்படி மாறி மாறி எம்மை அனுபவிக்க வைப்பது பராசக்தியின் அருட்செயலே. ஆக இறைவன் சித்தம் எதுவோ அதன்படி எல்லாம் நடக்கும் நாம் செய்ய வேண்டியது அசைக்க முடியாத ஒருமையுடன் இறைபக்தியில் ஈடுபடுவதே. அது ஒன்றே மன அமைதி பயக்கும். எல்லாக் காலத்தும் இன்பம் நல்கும். எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லால் வேறொன்றறியேன் பராபரமே.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்.


அன்பு ஆதரவு, சிறந்து விளங்க
அன்பர்கள், வாடிக்கையாளர்கள்,
நண்பர்கள்
மற்றும் அனைவருக்கும் தமது உளங்கனிந்த
புதுவருட நல்வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கிறார்
சப்பறம், மணவறை அமைப்பாளர்
S. S. சர்மா அவர்கள்.
உங்கள் மறக்கமுடியாத மகிழ்ச்சிகரமான
வைபவங்களுக்கு ஏற்ற
சப்பறம், மணவறை, பூந்தண்டிகை,
பந்தல் சேவை, பந்தல் சோடனை, கதிரைகள்
என்பன வாடகைக்கு விடப்படும்.
என்றும் உங்களுக்குச் சேவை நல்க
காத்திருக்கும்
S. S. சர்மா,
முருகமூர்த்தி வீதி,
சங்கானை.

தமிழ் மக்களின் துன்பம் நீங்கி வளமான
வாழ்வு பெற எமது அன்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய
புத்தாண்டு வாழ்த்துக்கள்!
இனிய புத்தாண்டிலே இந்திய யாத்திரை-சுற்றுலா
செய்து கீழ்க்காணும் புண்ணிய ஸ்தலங்களை
தரிசித்து நல்வாழ்வு பெறுங்கள்
சாயிபகவானைத் தரிசித்தல், திருச்சி, மதுரை, மட்றாஸ், பெங்களூர், மைசூர், சிதம்பரம், நாகூர், திருப்பதி, கொடைக்கானல், ஊட்டி, அன்னைவேளாங்கண்ணி ஆகிய இடங்களில் உள்ள புகழ்வாய்ந்த தலங்களைத் தரிசிக்கவும் ஆறுபடை வீடுகளைத் தரிசிக்கவும்
இன்றே தொடர்பு கொள்ளுங்கள் :
தலைமைப் பணிமனை:
துர்க்காதேவி ரூர்ஸ்
6, நவீனசந்தை மேல்மாடி,
(மக்கள் வங்கிக்கு அருகாமை)
யாழ்ப்பாணம்.
ஆலோசனைக் கிளைகள்:
★ திரு. எஸ். இராமலிங்கம் (ஆசிரியர்)
கொழும்பு ஸ்ரோர்ஸ் - பளை
★ திரு. க. கருணாரத்தினம்
வூட்லண்ஸ் டி ஹோட்டல், கண்டி வீதி, கிளிநொச்சி.
★ Dr. மகாலிங்கம்
அரவிந்தன் டிஸ்பென்சரி, கண்டி வீதி, மாங்குளம்.
★ திரு பெ. அழகு,
64, இராஜசோதி கபே, கண்டிவீதி, வவுனியா.
★ நியூறெயின்போ றவல்ஸ்,
இல. 15 7/4, சிறீ கதிரேசன் வீதி, கொழும்பு-13.

★ அன்பர்கள்
★ வாடிக்கையாளர்கள்
★ வர்த்தகர்கள்
அனைவருக்கும் எமது மனம் கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்களை
தெரிவித்துக்கொள்ளுகின்றேன்
எம். பாலகுமார்
(உதயன் சஞ்சிவி விளம்பரப் பிரிவு)
சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் புத்தாண்டுச் சிறப்பிதழ்

## புதிதாகப் பிறக்கும் சுக்கில வருடப் பலன்கள்

### வாக்கிய பஞ்சாங்கத்தின்படி

சுக்கில வருடத்தில் உலக மக்கள் அனைவரும் தன் மக்களோடு கூடச் சுகமாக வாழ்வர். அரசர்கள் ஒருவருக்கொருவர் வெற்றியடைய விருப்புள்ளோராய்ப் போரில் ஈடுபடுவர்.

சுக்கிரன் பலன்

நன் மழை, பயிர் விருத்தி தானிய மலிவு. தேசச் செழிப்பு, பால் தயிர் நெய் மிகுதி, பல விஞேத விருத்தி, பெண்கள் கணவருடன் ஒற்றுமையாய் வாழ்தல், வெண் தானியப் பெருக்கம் உண்டாம்.

வியாழன் பலன்

நன் மழை பயிர்கள் பூரண பலிதம், அரசர்களால் நன்மை விருத்தி, ஜனங்களுக்குச் சந்தோஷம் உண்டாம்.

புதன் பலன்

மேகங்கள் காற்றினுல் சிதறுண்டு இடையிடையே மழை பெய்தல் உயிர்கள் தானியங்கள் பலிதம், ஜனங்களுக்கு மனச்சித்தி குறைந்திருத்தல் உண்டாம்.

சூரிய பலன்

பயிர்கள் செழிப்பாக வளர்ந்து சொற்ப பலன் கிடைத்தல், கடலை கொள்ளு முதலிய தானிய விருத்தி ஜனங்களுக்கு உண்டாம்.

தானியாதிபதி
சுக்கிரன் பலன்

நல்ல மழை, சகல பயிர்களும் பூரணமாகப் பலிதம், வெண் தானியங்கள் மலிதல் உண்டாம்.

அர்க்காதிபதி
புதன் பலன்

மேகங்கள் காற்றினுல் அலைதல், நடுத்தர மழை, நன்செய்தானியங்கள் அற்ப பலிதம், புன்செய்தானியங்கள் பூரண பலிதம், அகவிலை சமம், துஷ்டர்களுக்கு கேடு உண்டு.

மேகாதிபதி புதன் பலன்

மேகங்கள் காற்றினுல் குழப்பப்பட்டு குமுறி இடித்து அற்பமழை பெய்தல், சொற்ப விளைவு, மத்திய பகுதிகளில் அதிக மழை உண்டாம்.

இரஸாதிபதி
செவ்வாய் பலன்

மிளகு, மிளகாய், இஞ்சி, கறுவா முதலியன மலிதல், உப்பு, நெய், நல்லெண்ணெய், வெல்லம், சந்தனம் முதலியன ஒறுத்தல் உண்டாம்.

நீரஸாபதி சூரியன் பலன்

மாணிக்கம், வச்சிரம், வைடூரியம், முத்து, பொன், செம்பு, பச்சைக் கர்ப்பூரம், சந்தனம் என்பவை மலிதல் உண்டாம்.

மேகம் நீலம் பலன்

இருண்ட மேகம், மின்னல், அதிக கச்சிதம் காற்றோடு கூடிய சுழிமழை, பயிர்கள் விளைவு குறைதல்

மழை மரக்கால் 4இன் பலன்

அதிகமழை, பயிர் செழிப்பு, தேச சுகம், தானிய விருத்தி, நோய் நீக்கம், மன மகிழ்ச்சி உண்டாம்.

பலன்

இவ் வருடம் மழை மிகுதி, பயிர்கள் பாதிக்கப்படுதல், அரசியலில் பெரும் மாற்றம், தென்னிலங்கையில் குழுக்களிடையே மோதல், கல்வி வசதி குறைதல், தொழிலாளர் கிளர்ச்சி, அரச சொத்துக்களுக்குச் சேதம் என்பன உண்டாம்.

### திருக்கணித பஞ்சாங்கத்தின் படி

இவ் வருடம் வியாழ பகவான் இராஜாவாக ஆட்சி செய்வதால் உலக நாடுகளில் கஷ்ட பலன்கள் குறையும். ஆயுதப் பரிகரணங்கள் குறைக்கப்படும். சமய சம்பந்தமான கருமங்களில் ஈடுபாடு கூடுதலாக இருக்கும். தரும காரியங்கள் விசேஷமாய் நடக்கும். மதஸ்தாபனங்கள் புதுப் பொலிவு பெறும்.

மந்திரி வியாழன் பலன்

மந்திரியும் வியாழனுக அரசோச்சுவதால்அரசவுயர்பீடங்கள் மக்களுடன் நல்லமுறையில் நடப்பார்கள். மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். மதஸ்தாபனங்கள், மதகுருமார் கௌரவிக்கப்படுவர்கள். மரம், செடி, கொடிகள் செழிப்புறும்.

சேனுதிபதி புதன் பலன்

புதன் சேனுதிபதியாக வருவதால் நாட்டில் கல்வித்துறை மேம்பாடடையும். பல்கலைக் கழகங்கள், கலாசாலைகள் ஏனைய கல்வி நிறுவனங்கள் ஆகியன சிறப்பாக இயங்கும். மாணவர்கள் கல்வியில் ஊக்கம் காட்டுவார்கள். கல்விமான்கள் கௌரவிக்கப்படுவர்.

ஸஸ்யாதிபதி சூரியன் பலன்

அதிகவெப்பமும் பயிர்களுக்கு நோயும் ஏற்படும். முற்பயிர்கள் நன்கு விளையும். கடலை, எள்ளு, பயறு முதலிய சிறு தானியங்கள் விருத்தியாகி மலியும். சிவப்புத் தானியங்கள், பூவகைகள் நன்கு பலிதமாகும்.

தானியாதிபதி வெற்றி
பலன்

சுக்கிரன் தானியாதிபதியாக விளங்குவதால் இவ் வருடம் நாட்டில்கால மழை நன்கு பொழியும். வயல் நிலங்கள் நன்கு விளையும். நாட்டில் திருமணம், களியாட்டங்கள் போன்ற மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் கூடுதலாக நடைபெறும்.

அர்க்காதிபதி புதன் பலன்

நாட்டில் பொதுவாக பொருட்களின் விலை அதிகமாகும். வெண்காயம், மிளகாய், கிழங்குவகை போன்ற உள்நாட்டு உற்பத்திப் பொருள்கள் நல்ல செல்வாக்கைப் பெறும். கைத்தொழில்கள் நன்கு விருத்தியாகும். சிறு கைத்தொழில்கள் செய்வோர் தங்கள் தொழில்களை அபிவிருத்தி செய்ய நன்று.

மேகாதிபதி புதன் பலன்

மேகங்கள் காற்றினுல் அடித்துச் செல்லப்பட்டு இடியோடு கூடிய மழை தொட்டம் தொட்டமாக ஒரோரிடங்களில் பெய்யும் இதனுல் சில இடங்களில் அதிக மழையும் சில இடங்களில் மழைக் குறைவும் ஏற்படும்.

இரஸாதிபதி செவ்வாய்
பலன்

வெல்லம், சீனி, கற்கண்டு போன்ற ரஸ வஸ்துக்கள் விலை அதிகமாகும். உப்பு, நெய், எண்ணெய் வகை, எள்ளு, மிளகாய், பழவகைகள் முதலியன விருத்தியாகி மலியும். சர்ப்பங்களுக்கும் ஆயுதங்களுக்கும் பீடை உண்டாகும்.

நிரஸாதிபதி சூரியன்
பலன்

தங்கம், பாஷாண வர்க்கம், வைரம் முதலிய இரத்தின வகைகள் விருத்தியாகி மலியும். சிவந்த வஸ்துக்களும் கற்பூரம், அகில் சந்தனம், முதலிய வாசனைத் திரவியங்களும் தாராளமாகக் கிடைக்கும்.

காளமேக பலன்

இம் மேகமானது மேருவின் வடக்குத் திசையிலிருந்து உற்பத்தியாகி காற்றுடன் சேர்ந்து நாட்டின் எல்லா இடங்களில் அதிக மழையை வருவிக்கும். இதனுல் நன் மழையும் பயிர் விருத்தியுமுண்டு.

மழை மரக்கால்

இவ்வருடம் மழை மரக்கால் நான்கு. புத்தாண்டு உதயமாகும்போது ''விருச்சிக லக்னம்'' உதயமாகிறது. இலக்கினுதிபதி செவ்வாயும், குரு பகவானும் லக்கினத்தைத் திருஷ்டிப்பது நன்றாகும். நாட்டின் தேசிய நலன் சிறப்படையும். உலக நாடுகளிடையே சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். 2 இல் சனி. யுரேனஸ், நெப்டியூன் சஞ்சரிப்பதனுல் பலவகையான பொருள் நஷ்டங்களையும், காத்திராப்பிரகாரமான விபத்துக்கள், இயற்கையழிவுகளையும் காட்டுகிறது. சுக்கிரன் 5 இல் உச்சம் பெறுவதனுல் பொழுதுபோக்குத்துறைகள். களியாட்டங்கள், திருமணம் போன்ற மகிழ்ச்சிகரமான விடயங்கள் கூடுதலாக இடம்பெறும். அண்டைநாடுகளுடன் நட்புறவு அதிகரிப்பு, கடல் போக்குவரத்து முன்னேற்றம் என்பன ஏற்படும்.

இலங்கையை நோக்குமிடத்து அதன் இலக்கினமாகிய கும்பத்தில் இராகு சஞ்சரிக்கும் காலம்வரை அமைதியின்மையும், சஞ்சலங்களும் இடையிடையே இருந்து கொண்டிருப்பினும், புனர்நிர்மாணங்களும், புதிய பல திட்டங்கள் அமுலாக்கப்படுதலும், மக்களிடையே திருப்தியும் முன்னேற்றமும் ஏற்படும். கல்வித்துறை நல்ல முன்னேற்றத்தை அளிக்கும் போக்குவரத்துச் சேவை, தபால் தந்திச் சேவை என்பன விருத்தியடையும். மக்களிடையே மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சிகள் மூலம் புத்துணர்வு காணப்படும். மத சம்பந்தமான நிகழ்ச்சிகளில் மக்களுக்கு ஆர்வம் மிகும். காலமழை நன்கு பெய்து விவசாய வளர்ச்சியடையும்.


புதுவருடத் திருநாள் புத்துயிர் ஊட்டும் நன்னுள்
இப்புனிதப் பெருநாளில் எல்லோரும்
இன்புற்று இருக்க வாழ்த்துகிறேம்!

LUCKY PLAZA
லக்கி பிளாஸா

நாகரீக உலகத்திற்கு ஏற்ற முறையில்
அதி நவநாகரீக பொருள்களை ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

DEALERS IN: Fancy Goods, Radio, Watches, Clocks, Baby's Items, Presentation Articles Etc.

67, 68, NEW MARKET, JAFFNA.
Telephone : 23509



வாடிக்கையாளர்கள் ஆதரவாளர்கள்
நண்பர்கள் அனைவருக்கும்
எமது உள்ளம் கனிந்த
புதுவருட வாழ்த்துக்கள்!

சீமாட்டி ரெக்ஸ்ரைல்ஸ்

122, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்,



துன்பம் நீங்கி வளமான வாழ்வுபெற இன்றைய புத்தாண்டு திருநாளில் நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது

இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

வீடு கட்டுவதற்கு ஏற்ற கிறீல்கல், ஓடு, செங்கல்லு
மற்றும் தரமான கட்டடப் பொருட்களின் விற்பனையாளர்கள்

மு. தா. சோமசுந்தரம் அன் சன்ஸ்

199, மின்சாரநிலைய வீதி, — யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 33845

கிளை — கல்வியங்காடு
ஆடியபாதம் வீதி,
நல்லூர்.

தந்தி ''பாதுகாதேவி''



அன்பர்கள் வாடிக்கையாளர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது உள்ளம் கனிந்த
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

National Shipping & Travels

New Lalitha Building
185/2, Kasthuriar Road,
JAFFNA.



நண்பர்கள், ஆதரவாளர்களுக்கு
தமது அன்புகனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்பவர்கள்



★ M THREE TRAVELS ★

★ மத்தியகிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்பு
★ துரிதகதியில் பிரயாணம்
★ நம்பிக்கை, நாணயம், நேர்மை, கண்ணியம்

இவற்றுக்கு ஒரு முகவர் நிலையம்

M. THREE TRAVELS

கிளை :
இல. 1, 2ஆம் குறுக்குத்தெரு,
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

SOTHY LANE,
COLLEGE ROAD,
K. K. S.



ஆசிரியர்களுக்கும், மாணவ, மாணவிகளுக்கும்
எமது அன்பு நிறைந்த
சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்ளுகின்றேம்.

NIRU TUITION CENTRE
KONDAVIL.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் புத்தாண்டுச் சிறப்பிதழ்

## சஞ்சலம் நீங்கிச் சாந்தி நிலைப்பதற்கு

## சுக்கில ஆண்டு சுகம் தருக

வருடப் பிறப்பு எல்லாச் சாதியினருக்கும், எல்லாச் சமயத்தினருக்கும் மகிழ்ச்சியைக் கொடுப்பதொன்றாகும். பிறக்கப் போகும் புத்தாண்டை மகிழ்ச்சியுடன் வரவேற்பது, அவ்வாண்டில் வாழ்வு இன்பமாக அமையும் என்ற எண்ணத்தினால் போலும் புதியன புனைந்து, புனிதனை வணங்கி, இனிய உணர்வுடன் இனத்தினருடன் உறவாடி கனிவு மிளிர வாழ்வு களிப்புடன் அமையும் வகை செய்வது புத்தாண்டு. ஒவ்வொரு இனத்தவருக்கும் அவர் தம் வருடப்பிறப்புப் பின்னணியில் மிகவும் விசித்திரமான ருசிகரமான உண்மைகள் இருப்பதை உணரலாம்.

இன்று உலகெங்கிலும் வழக்கிலுள்ள வருஷப் பஞ்சாங்கம் கி. பி. பதினாறும் நூற்றாண்டில் போப்பாண்டவராக இருந்த கிறகெறி என்பவரால் நிர்ணயிக்கப்பட்டது. இதன் படி ஆங்கிலேயர் ஜனவரி முதலாம் தேதியை தமது வருடப் பிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். நத்தார் பண்டிகையின் பின்னர் வருடக் கொண்டாட்டம் தொடர்கின்றது. தமிழர்கள் இளவேனிற் காலத்தின் ஆரம்ப தினமான சித்திரை முதல் தேதியை தமது வருடப் பிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். இது சூரியன் மேட இராசியில் புகுவதைக் குறிப்பது. சிங்களவரும் சித்திரை முதல் தேதியையே தமது வருடப் பிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். கன்னடர்கள் கொல்லம் புது வருடத்தை ஆவணி முதலாம் தேதியில் கொண்டாடுகிறார்கள். வங்காளத்திலும் இளவேனிற்காலமே வருடப் பிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. முஸ்லிம்களின் வருடம் முகர்ரம் மாதத்தில் பிறக்கிறது. நபிகள் நாயகம் அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவிற்குத் தப்பியோடிய யாத்திரைக் காலமான கி. பி. 622 ஆம் ஆண்டிலிருந்து அவர்களுடைய வருஷம் கணிக்கப்படுகின்றது. இவ்வாறு பருவ மாறுதலுக்கேற்பவும் சமய அடிப்படையிலும் வருஷக் கொண்டாட்டம் அமைகின்றது.

வருஷப் பிறப்புக் கருமத்தை விபரிக்கும் தமிழ் பஞ்சாங்கம் விஷு புண்ணிய காலம் என்பதைக் குறிப்பிடுகின்றது. பருவமாற்றம் சூரியனாலேயே உண்டாகின்றது.

எனவே சூரியகதியைக் கொண்டே நமது முன்னோர்கள் காலத்தைக் கணித்தனர் என்பது வெளிப்படை. சூரியனது சஞ்சாரத்தை அடுத்து ஏற்படும் பருவ மாற்றத்தினால் உருவாகும் புதுமைக் கோலத்தையொட்டி கொண்டாட்டங்கள் அமைந்தன. தமிழ் மக்களின் வருஷக் கொண்டாட்டம் இளவேனிற் காலத்தின் ஆரம்பத்தில் அமைந்தது குறிப்பிடத்தக்கது.

இளவேனிற் காலம் பனி நீங்கி விட்டகாலம். இயற்கை புத்தெழில் பெறும் காலம். சகல ஜீவராசிகளும், ஏன்மரம் செடி, கொடிகள் தாமும் குதூகலத்தோற்றமளிக்கும் காலம். இவ்விதம் இயற்கை முழுவதும் சேர்ந்து கொண்டாடக்கூடிய ஒரு காலத்தை புதுவருடப் பிறப்பாக தெரிந்தெடுத்த பழந்தமிழரின் மதி நுட்பமும் பண்பட்ட உள்ளமும் போற்றத்தக்கன. இயற்கை இன்பத்தோடு வாழ்வியல் இன்பத்தையும் இணைத்துக் கொண்ட ஒருமைப்பாட்டுணர்ச்சி பாராட்டத்தக்கது. இன்பச் சூழலில் இன்பத்தின் பெருக்கம் காணப்படுவது இயற்கையே.

முற்காலத்தில் தமிழர்கள் தமது புதுவருடத்திற்கு முக்கியமாகச் சேர்த்துக்கொண்ட பச்சடி மிகவும் அருமையான வாழ்க்கைத் தத்துவத்தை தன்னுள் அடக்கியுள்ளது. அந்தப் பச்சடியானது வேப்பம்பூவும். மாம்பழமும், புளியும், சர்க்கரையும் சேர்த்துச் செய்யப்பட்ட ஒன்று. வருடப்பிறப்புக் கொண்டாட்டத்திற்கு வரும் சுற்ற மித்திரர்களுக்கு முதலில் இதையே வழங்கினார்கள். வருடம்பிறக்கும் அன்றே வாழ்வானது கசப்பும், புளிப்பும், இனிப்பும் கலந்துள்ளது என்பதை மறக்க முடியாத முறையில் மக்களுக்கு நினைவூட்டுவதை நமது முதற் கடமையாக நமது மூதாதையர்கள் செய்தனர் போலும்.

இப்பொழுது கலியுகம் நடைபெறுகின்றது. பிறக்கப் போகும் சுக்கில வருடம் கலி 5091 ஆகும். கலியுக ஆரம்பம் கி. மு. 3102 ஆம் ஆண்டு பெப்ரவரி 18 ஆம் திகதியாகக் கணிக்கப்பட்டுள்ளது. அடுத்துவரும் சகாப்தம் கி. மு. 57 ஆம் வருஷத்தில் தொடங்கிய விக்கிரம சகாப்தம். இது புது ஆண்டில் 2046 ஆம் ஆண்டு ஆகும். அதற்கு அடுத்து வருவது சாலிவாகன சகம். இது கிறிஸ்து சகாப்தத்திலிருந்து 77 ஆண்டுகள் பிந்தியது. சுக்கில வருடம் சாலிவாகன சகம் 1912 ஆகும். கொல்லம் வருஷம் புது ஆண்டில் 1165 ஆம் முஸ்லிம் வருஷம் 1409ம் ஆகும்.

வாழ்வில் இன்பம் நிலவ அகத்தும் புறத்தும் அமைதி அவசியம். அமைதி நிலவுதற்கு அன்பும், புரிந்துணர்வும் அத்தியாவசியம். அத்தகைய ஒரு நிலை ஏற்பட்டால்தான் மனித வாழ்வின் சாதனையால் உலகம் பயனடைய முடியும். எனவே அன்பும் அறமும் பெருகி வறுமையும், பிணியும் அருகி ஆன்மநேய ஒருமைப்பாடு எங்கும் பரவி எல்லோரும் வாழ்க! இன்பமே சூழ்க! சுக்கில ஆண்டு இத்தலமெங்கும் இன்பம் பெருக்க; இனிதே மலர்க!

''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல்
வேறொன்றறியேன்
பராபரமே''
தாயுமானார் ★

பரமேஸ்வரி சிவராமலிங்கம்

### மணிவாக்கு

நல்ல காரியங்களைச் செய்வதன் மூலம் உள்ளத்தைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். கர்மானுஷ்டானங்களில் வழுவாமல் ஈடுபட்டிருக்கும் ஒருவனுக்கு எந்தப் பாவத்தையும் சிந்திக்கவோ, [illegible] செய்யவோ காலம் இராது [illegible] ஏலாது.

### புத்தாண்டே புது உலகம் படைத்திட வா!

கண்ணீரும் செந்நீரும் கலந்திங்கு
காட்டாறாய்த் துயர் பாய்ந்த வாழ்வு நீங்கிச்
செந்நெல்லும் தென்னையொடு தேயிலையும்
நற்பருமாய்த் தொழில்கள் ஓங்க
எந்நாளோ எம் கழுத்தில் ஒரு தாலி
ஏறுமென ஏங்குவோர்க்கும்
பொன்னான வாழ்வீந்து பொலிவு நிறை
புது உலகம் படைத்திட வா புதிய ஆண்டே!

— நெடுந்தீவு லக்ஸ்மன்


வாடிக்கையாளர்களுக்கும் அன்பர்களுக்கும்
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்
றேடியோ T. V. மின்சார உபகரணங்கள்
சிறந்த முறையில் திருத்துவதற்கு
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்
Thurga Radio Electronics
K. K. S. Road, Chunnakam

வறுமை நீங்கி வளம் பெருகிட
எமது வாடிக்கையாளர்களுக்கும்
நண்பர்களுக்கும்
புத்தாண்டு வாழ்த்துக்கள்!
சிறந்த கறுப்பு வெள்ளை
படங்களுக்கும் கலர்படங்களுக்கும்
வீடியோ கலர் படங்களுக்கும்
நீங்கள் நாட வேண்டிய
ஸ்ருடியோ
நியூ சித்திரகலா ஸ்ருடியோ
70, கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும்
எமது புத்தாண்டு
வாழ்த்துக்கள்!
கல்யாணி கிறீம் ஹவுஸ்
73, கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.

எல்லோருக்கும் எமது அன்புகலந்த
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
தேனினும் இனிய ஐஸ்கிறீம் வகைகள்
குளிர்பான வகைகள்
சுவைமிகுந்த சிற்றுண்டி வகைகளும்
லிங்கம் ஸ்பெஷல் பீடாக்களும்
பெற்றுக்கொள்ள தவறாது விஜயம் செய்யுங்கள்
லிங்கம் கிறீம் ஹவுஸ்
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

ஆதரவாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எமது புதுவருட வாழ்த்துக்கள்!
உங்கள் வீட்டுக்குத் தேவையான
சகலவிதமான மின்சாரப் பொருள்களை
நேரடித் தொடர்புகொண்டு மலிவாகப்
பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய
நிறுவனம்
வசந்தி எலெக்றிக்கல்ஸ்
110, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.
குறிப்பு : எமது நிறுவனத்தில் 14-4-89 இல் இருந்து 30-4-89 வரை ரூபா 2000/-க்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு அழகிய தோல்பை இலவசமாகக் கொடுக்கப்படும்.

வாடிக்கையாளர்களுக்கு மில்லர்ஸ் நிறுவனத்தினர்
தமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கின்றனர்!
இதோ!
உங்கள் பிரபல்ய போஷாக்கு
நிறைந்த
லீடா
முழு ஆடைப்பால்மா
வசதியான
பக்கட்களில்


விநியோகஸ்தர்கள்,
மில்லர்ஸ் லிமிடெட்
த. பெ. இல: 100,
கொழும்பு - 1
400 கிராம் பக்கட் ரூ. 29/90
1 கி. கிராம் பக்கட் ரூ. 85/=
2 கி. கிராம் பக்கட் ரூ. 162/=
லீடா இப்பொழுது ஓர்குடும்பத்தின் அங்கம்
IMAGE


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் புத்தாண்டுச் சிறப்பிதழ்

எமது வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்,
அன்பர்கள் யாவருக்கும் இதயம் கனிந்த

**புதுவருட வாழ்த்துக்கள்**

உரியதாகட்டும்!

எமது நிறுவனத்தில்
பாடசாலை உபகரணப் பொருள்கள், ாகிதாதிகள் மற்றும் மின்சார உபகரணங்கள், அன்பளிப்புப் பொருள்கள் யாவும் நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**அர்பலவாணர் அன் சன்ஸ்**

(தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள்)
196, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

## சுக்கில ஆண்டிற சிறப்பாய் வாழ்வோம்!

த்தனை ஆண்டுகள் கடந்து சென்றன!
எம்மவர் வாழ்வில் துயரம் மறைந்திலை!
நித்தம் நாட்டில் நடக்குஞ் செயல்களோ
நல்லவர் நெஞ்சிலே முள்ளாய்த்தைத்திட
த்தனை இடர்லும் அசையா உறுதியில்
இம்மண் மீதினில் தொடரும் வாழ்வில்
சித்தம் குளிரும் செய்திகள் நோக்கிச்
சுக்கில ஆண்டிற் சிறப்பாய் வாழ்வோம்!
சிந்தனை மிக்க சிற்பிகள் இருக்கச்
செயல்திறன் வல்ல கைகள் இருக்கச்
சுந்தரப் பூமி செழித்து விளங்கச்
சீர்மிகுந் துறைகள் நிறைவாய் இருக்க
வந்தனை செய்தே வாழும் ந ட்டை
வளமாய் ஆக்க உழைத்தே நாங் ள்
விந்தையோ என்றே வியக்கும் வண்ணம்
சுக்கில ஆண்டிற் சிறப்பாய் வாழ்வோம்!

—நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்.



அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது உளம் நிறைந்த
**புத்தாண்டு வாழ்த்துக்களைத்**
தெரிவித்துக்கொள்கின்றோம்.

- Warner Lambert Lanka Ltd.
- Hemas (Drugs) Ltd.
- Mackwoods Ltd.
- Farnell Ceylon Ltd.
- Lanka Medical (Import) Ltd.

இக் கம்பனிகளின் அதிகாரம் பெற்ற வடமாகாண
ஏக விநியோகஸ்தர்கள்

**நியூ பார்மேட் டிஸ்ரிபியூடர்ஸ்**

128, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

எம்மிடம் மொத்த விலையில் பார்மஸி சேஜிகல் பொருள்களும் விற்பனைக்குண்டு.

**யாழ் நகரில்...**

வெலிங்டன் சந்திக்கு அண்மையில்
மணிக்கூட்டு வீதியில் அமைந்திருக்கும்

**யாழ் றிக்கோ
சுவீற் அன் கிறீம் ஹவுஸ்
ஸ்தாபனத்தார்**

தம் வாடிக்கையாளர்களுக்கு தித்திக்கும்
புத்தாண்டு வாழ்த்துக்களைத்
தெரிவிக்கின்றார்கள்

தம் வாடிக்கையாளர்களுக்கு தரமான உணவுவகைகளை வழங்குவதில் முன்னணி வகிக்கின்றார்கள் என்று வாடிக்கையாளர்களே பாராட்டும் நி வனமாகி விட்டது.

**காலை உணவாக:**

இடியப்பம், இறைச்சிக்கறி, பாண், பருப்புக்கறி, சீனிச்சம்பல், கிழங்குக்கறி, என்பனவும் தரமான ஐஸ்கிறீம் வகைகளையும் சர்பத் குளிர்பானங்களையும் வழங்குகிறார்கள். தரமான பாண் விற்பனை செய்வதில் முதலிடம் பெற்றுவிட்டார்கள். தம் வாடிக்கையாளரை இன்முகத்துடன் வரவேற்கிறோம்.

**யாழ் றிக்கோ சுவீற் அன் கிறீம்ஹவுஸ்**

இல: 352, மணிக்கூட்டு வீதி,
வெலிங்டன் சந்தி யாழ்ப்பாணம்.

# சமுதாய வளர்ச்சிக்கு தர்மநெறி அவசியம்

சிவயோகசுவாமிகள் 'தர்ம நெறியில் பிசகாதே' என்று பலமுறை பகர்ந்துள்ளார். தர்மநெறி காலத்துக்குக் காலம் மாறுவது கிடையாது. ஒரு சமுதாய வளர்ச்சிக்கு அல்லது தனி மனிதனின் முன்னேற்றத்துக்கு தர்மநெறி மிகவும் அவசியம்.

இன்று பலர் எதைஎதையோ செய்கிறார்கள். அவை யாவுக்கும் ஆள்பலம், அதிகாரம் துணை செய்கிறது. எது தர்மநெறி எதுஅதர்மமான செயல் என்பதற்குவிளக்கமாக அமைகிறது நமது சாஸ்திரங்கள். சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட பிரகாரம் மனிதன் வாழ்ந்தால் தர்மநெறியில் வாழ்வது சுலபம்.

**- சுவாமி சித்ரூபானந்தா -**

ஸ்ரீமத் பகவத்கீதை இன்று உலகெங்கும் போற்றப்படும் உயர்ந்த சாஸ்திரம். இதனை நன்கு தினம் பாராயணம் செய்பவர்கள் பலர் பல நாடுகளில் இருக்கின்றார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நேர் சீடரான ராமகிருஷ்ணானந்த சுவாமிகள் தினமும் 18 அத்தியாயங்களைப் படிப்பார்.

இன்று நமது நாட்டில் இருக்கும் சகல அமைதியின்மைக்கும் மூலகாரணம் தர்மநெறி தெரியாமல் பலர் வாழ்வது தான்.

ஸ்ரீராமகிருஷ்ணர் கலியுகத்தில் வாய்மை ஒன்றினாலேயே கடவுளை அடையலாம் என்று பகர்ந்துள்ளார். தர்மநெறிக்கு மூலகாரணமாக இருப்பது நாம் செய்யும் யக்ஞம் என்று கீதை பகர்கிறது. யக்ஞம் செய்யாத வாழ்நாளோ வீண்நாள் ஆகிறது. ஒருவன் வீண் நாள் வழியடைப்பதற்கு ஐம்பெரும் வேள்விகளை நாள்தோறும் செய்தாக வேண்டும்.

அவையாவன:-

1. தேவயக்ஞம்: கடவுள் வழிபாடு இல்லாது ஒருநாள் கழியலாகாது. இஷ்ட தெய்வத்தை நாள்தோறும் முறையாக வாழ்த்தி வணங்க வேண்டும்.

2. ரிஷியக்ஞம்: உலக நன்மையின் பொருட்டு பல சாஸ்திரங்கள் மகாமுனிவர்களால் நமக்கு எடுத்தியம்பப்பட்டுள்ளன. இவைகளைப் போற்றுதலும் மற்றவர்களுக்கு எடுத்து ஓதுவதும் நமது கடமை.

3. பித்ருயக்ஞம்: பிதா மாதாவை இருக்கும் போதும், உயிருடன் இல்லாத போதும் பேணுதல் அவசியம்.

4. நரயக்ஞம்: வறுமையில் வாடும் மக்களது பசியைப் போக்குதல், நோயை நீக்குதல், உடை கொடுத்தல், கல்வியைப் பெருக்குதல் ஆகிய இவை யாவும் இதில் அடங்கும்.

5. பூதயக்ஞம்: ஆடு, மாடு முதலிய பிராணிகளுக்கு உணவளித்து வருதலாகும்.

மனிதன் இவ்விதமான ஐந்து யக்ஞத்தை முறையாக நடைமுறைப்படுத்தும் பொழுது மழை காலத்துக்குக் காலம் பெய்யும். இவ்வாறு மழை பெய்யுமானால் உணவு உருப்படுகிறது. உணவினால் உயிர்கள் வாழும். ஆகவே யக்ஞத்திற்கு பிறப்பிடம் கர்மம். (கீதை 3 ஆம் அத்தியாயம் 14 ஆம் சுலோகம்)

இன்று நாம் காண்பது இதற்கு எதிர்மாறாக அமைகின்றது. அவரவர் தங்கள் தங்கள் வசதிக்கும், தங்கள் மோகத்திற்கும் ஆசைக்கும் ஏற்றவாறு காரியங்களைப் புரிந்துவிட்டு பலவித சமாதானங்களைச் சொல்லி வாழ்நாளைக் கழித்துக்கொண்டு வருகிறார்கள். உலகெங்கும் இந்த நிலைதான் தற்சமயம் இருக்கின்றது. ஆகவே பிறக்கப்போகும் புதுவருடத்திலேனும் தர்மநெறியில் பிசகாமல் வாழ உறுதியானதும், உண்மையானதுமான வழி ...

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

**டி வி எஸ் சுசுக்கியின்**



**TVS CHAMP**

இருவர் பயணம் செய்யக்கூடியதும், லிட்டருக்கு
60 கிலோமீட்டர் செலுத்தக்கூடியதுமான ஒரே மொபெட்

**பயணத்துக்கோர் இனியதுணைவன்**

ஏக விநியோகஸ்தர்கள் TVS SUZUKI

**லம்கோ** லிமிட்டட்

515 ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு - 10. தொலைபேசி 92799 595486

**Jaffna District
Authorised Dealer:
"TELLI AUTO SERVICE"
TELLI ENGINEERING BUILDING,
K. K. S. Road,
Tellippalai.**

எங்கள் அன்புமிகு பாவனையாளர்கள் விநியோகஸ்தர்கள் நண்பர்களுக்கும்
எமது அன்பான
**புதுவருட நல்வாழ்த்துக்கள்**

**★ லீலா பேக் ஹவுஸ் ★**

மாக்கற் சதுக்கம்,
சங்கானை.

கிளை: சிரணி
சண்டிலிப்பாய்.

தரமான உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு தாரீர்

பொங்கும் மங்களம் எங்கும் தோன்றிட புத்தாண்டுத் திருநாளாகிய
இந்நன்நாளில் எமது வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும்
எமது இனிய
**புதுவருட நலவாழ்த்துக்கள்!**

**கே. கே. வி.**



யாழ்ப்பாணம் நகை மாளிகை
தங்க வைர நகை வியாபாரம்
82/4, கஸ்தூரியார் வீதி - யாழ்ப்பாணம்.

**தங்கப் பவுண் வைர நகைகள்**
எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்
ஓடர்கள் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

**K. K. V. Jaffna Jewel House**
82/4, Kasthuriar Road, Jaffna.
தொலைபேசி 021 — 22362

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் புத்தாண்டுச் சிறப்பிதழ்

## நீதி ஞாலத்தில் நிலைக்க வாராய்!

தமந்திகைப் பெயரி னேடு
தகுநிம்ப ஜலத்தில் ஆடி
தண்வெள்ளை யுடை யுடுத்து
சந்தனக்கஸ் தூரி பூசி
கமழ்ந்திடு புன்னை மாலை
கமலப்பொன் மாணிக் கங்கள்
கதிரெழப் புனைந்து வெள்ளைக்
கவிகையும் தாங்கி அன்னம்
அமைந்திட அருந்தி வீணை
ஆதிவாத் திய முழங்க
அணிசிங்க வாகனத்தில்
அவனியில் உதிக்கும் ஆண்டே
நமதிடர் தீர்த்து நம்மை
நல்குசுக் கிலபுத்தாண்டே
நன்றி நாண் நியாயம் நீதி
ஞாலத்தில் நிலைக்க வாராய்.

—அருட்கவி சீ. விநாசித்தம்பி.

## "புத்தாண்டு புதுப்பொலிவுடன் திகழ்வதாக"

மனிதன் பூமியிலே தோன்றிய காலம்தொட்டு, அவன் தான் வாழ்ந்துவரும் இயற்கைச் சூழ்நிலையினை அவதானித்துவந்துள்ளான். இயற்கை நிகழ்ச்சிகளுக்கும் மனிதவாழ்வுக்கும் இடையிலுள்ள தொடர்புகளை அவன் கவனிக்கத்தவறிலன். குறிப்பாக, சூரியன், சந்திரன் போன்ற கிரகங்களுக்கும் - பூமிக்கும் குறிப்பாகப் பூமியிலேவாழ்ந்து வரும் மனிதனுக்கும், பிற உயிரினங்களுக்கும் இடையில் நிலவிவரும் தொடர்புகளை அவன் அவதானித்தான். இதன் விளைவாக வானநூல், ஜோதிஷம் (சோதிடம்). விழாக்கள் எனப்பல அறிவியல்களும், பண்டிகைகளும் தோன்றின. இவை மனித வாழ்விற்கு நன்மை பயப்பனவாகவும் விளங்கின; தென்பட்டன.

மனிதன் வாழும் பூமியிலே சூரியனுடைய செல்வாக்கே மிகமுக்கியமானதாகும். சூரியனை மையமாகவைத்தே கிரகங்களைப்பற்றி அறிஞர் கூறுவர். பூமியும் ஒருசிறு கிரகமெனக் கூறப்படும். தென் ஆசியாவிலே குறிப்பாகத் தென்னிந்தியா, இலங்கை போன்ற இடங்களிலே சூரியன், சந்திரன் முதலிய கிரகங்களின் அசைவுகளை அடிப்படையாகக் கொண்டு பஞ்சாங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

சூரியனின் இயக்கத்தினை - அசைவினை அடிப்படையாகக் கொண்டு ஆண்டு-உத்தராயணம் (வடக்கே செல்லுதல்- சூரியன் பூமத்திய ரேகையில் இருந்து வடக்கே கர்க்கடக ரேகைக்குச் செல்லுதல் தை தொடக்கம் ஆனி முடியும் வரை) தக்ஷிணாயனம் (தெற்கே செல்லுதல், சூரியன் தெற்கே மகரரேகைக்குச் செல்லுதல்- ஆடி தொடக்கம் மார்கழி முடியும்வரை) என இரு பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது.

வட கோட்டிற்கும், தென் கோட்டிற்கும் செல்லும் சூரியன் ஆண்டில் இருதடவைகள் நடுக்கோட்டிற்கு வருவான். இது மார்ச், செப்டம்பர் மாதங்களில் நிகழும். வடகோட்டிற்குச் செல்லும் போது சூரியன் இலங்கை, தென்னிந்தியா ஆகிய இடங்களில் ஏப்ரல், செப்டம்பர் மாதங்களில் உச்ச நிலையில் காணப்படுவான். பெரும்பாலும் இத்தகைய சூரிய இயக்கத்தின் அடிப்படையிலே மேற்குறிப்பிட்ட இடங்களிலே பருவங்கள், விழாக்கள் முதலிய தோன்றியுள்ளன. எடுத்துக்காட்டாக, சூரியன் மகர ராசிக்குள்ளே செல்லுதல்- மகரசங்கிராந்தி-தைப் பொங்

**வி. சிவசாமி**

கல் விழாவாகவும், முதலாவது ராசியான மேட ராசிக்குள்ளே செல்லுதல் மேடசங்கிராந்தி-சித்திரை வருடப் பிறப்பாகவும், கர்க்கடக ராசிக்குள்ளே செல்லுதல்- ஆடிப்பிறப்பாகவும் கொண்டாடப்படுதலைக் குறிப்பிடலாம்.

சித்திரை வருடப்பிறப்புக் காலத்திலே சூரியன் நம்நாட்டுக்கு உச்சிமேல் வருகிறான். இத்துடன் புத்தாண்டு கணிக்கப்படுகிறது. இது இலங்கையைப் பொறுத்தமட்டில் இங்குவாழும் தமிழ், சிங்கள மக்களுக்குப் பொதுவான தேசிய விழாவாக விளங்குதல் குறிப்பிடற்பாலது.

புத்தாண்டு மலரும்போது இயற்கையிலும், மக்கள் வாழ்விலும் புதுப்பொலிவு தோன்றும். இயற்கையிலே வசந்த காலம் இப்போது பிறக்கின்றது. பொதுவாக, எவ்விடத்திலுமுள்ள மரங்களும், செடி, கொடிகளும் பூத்துக்குலுங்கும் புதுப்பொலிவுடன் விளங்கும் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தளவில், வேப்ப மரங்களும், மாமரங்களும் பிறவும் பூத்துக் காட்சியளிப்பன. சித்திரை, இக்காலத்திலே இங்கு 'சிறு மாரியாக' இருப்பதால், பார்க்குமிடங்கள் 'பசேல்' எனப் பசுமையாகத் தோன்றலாம்.

எனினும், கடந்த சில ஆண்டுகளாக மாரி பொய்த்தமையால் இந்நிலை குன்றியிருப்பினும், முற்காலத்தில் நிலை வேறுபட்டிருந்தது. இயற்கை மலர்ந்து, பின்னர் காய், கனிகளுக்கு வழிவகுக்கும். மக்களும் புத்தாண்டிலே புத்தூக்கமும், புத்துணர்வும் பெற்று ஆண்டு முடியும்வரை [illegible] முயற்சிப்பர். புதிய ஆண்டுக்கான திட்டங்களைப் பலர் வகுத்துக்கொள்வர். இப்புத்தாண்டுச் சிறப்புப்பற்றிப் பல புலவர்கள் பாடியுள்ளனர்.

இச்சித்திரை வருடப்பிறப்பு இப்பிராந்தியத்திலே வாழுகின்ற எம் மதத்தினரும் கொண்டாடக்கூடிய பொதுவான பண்டிகையாகும். வரப்போகும் சுக்ல (வெண்ணிற, தூய) புத்தாண்டு அனைவர் வாழ்விலும் புதிய நல்லுணர்வுகளையும், நல்லாக்கங்களையும் ஏற்படுத்தி மக்கள் முன்னேற வழிவகுப்பதாக! ★



## சித்திரைக் கன்னி!

சித்திரை என்னும் செந்தமிழ்க் கன்னி
இத்தரை வந்தாள் இனிதாக!
நித்தமென் நெஞ்சில் நடமிடும் நங்கை
நேரில் வந்தாள் கனிவாக!

புத்தெழிற் கோலம் பூண்டவன் அழகுப்
பூவென வந்தாள் ஒயிலாக!
முத்தெழில் முறுவல் பூத்திடும் அழகு
முகத்தினள் வந்தாள் மயிலாக!

—கீழ்கரவை. குலசேகரன்.

## பொங்குமே குறளின் வாழ்வு

எங்குமே இன்ப மோங்கும்
இணையிலா அன்பு தேங்கும்
மங்களம் பொங்கும் வாழ்வு
மனையெலாம் பொங்கித் தேங்கும்
பொங்குமே குறளின் வாழ்வு
பொய்மையே அழிந்து போகும்
சங்குகள் முழங்கும் எங்கும்
வள்ளுவன் குறளைக்கூறி.

—செல்வி பூங்கொடி அருளம்பலம்.

மங்களகரமான இந்நன்னாளில் அன்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் எல்லோரும் இன்புற்றிருக்க
எமது இதயம் கனிந்த
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
மனங்களில் தோன்றும் கலை எண்ணங்களுக்கு ஏற்ப வண்ணப்படங்களாகி மகிழ்ந்திட
Ask for PROCESSING BY Kodak DISTRIBUTOR - G·T·A
குறைந்த கட்டணத்தில்
● விரைவான ● தரமான சேவைக்கு நாடுங்கள்
சென்றல் கிளினிக்
193 A, POWER HOUSE ROAD, JAFFNA.

1939 - 1989
50 வருடங்களாக யாழ் நகரில் முதன்மைபெற்ற ஸ்தாபனமாக விளங்கியும் இணையற்ற சேவையும் செய்துவரும் பாரத் ஸ்ரூடியோ ஸ்தாபனதமார் பொன்விழாவில் காலடிவைக்கும் இவ்வேளையில் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தமது
இனிய புதுவருட நல்வாழ்த்துக்களை
தெரிவித்துக்கொள்ளுகிறார்கள்.
சிறந்த புகைப்படங்களுக்கு
அன்றும் இன்றும் என்றும்
பாரத் ஸ்ரூடியோ
82 1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
சிறந்த வீடியோ படப்பிடிப்புக்கும், வீடியோ ரெக்கோடிங் செய்வதற்கும் பாடல்கள் பதிவுசெய்வதற்கும் வீடியோ படங்கள் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளவும்
சிறந்த இடம்
பாரத் வீடியோ சென்ரர்
51/1, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.



★ ஜெனட்டென்ஸ் ★
வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள்!
உயர்ரக உருக்கு (Steel) தளபாட உற்பத்தியின் முன்னோடிகள்!
புதிய அமைப்பில் உறுதியும் உத்தரவாதமும் கொண்ட
வீட்டு, காரியாலய (OFFICE)
தளபாடங்களுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
ஜெனட்டென்ஸ்
கே. கே. எஸ். வீதி,
இணுவில்.



வாடிக்கையாளர்கள், நண்பர்களுக்கு
எமது அன்புகனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்!
அழகிற்கு
அழகு செய்யும்
அழகிய



★ தங்கப்பவுண் நகைகளுக்கு ★
விஜயம் செய்யுங்கள்
சோபனா ஜுவல்லறி
116V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் புத்தாண்டுச் சிறப்பிதழ்

## சித்திரை மாதத்துப் பெருவிழா
## சிலப்பதிகாரத்து இந்திர விழா

விழாக்கள் அன்றிலிருந்து இன்றுவரை அவ்விழாவைப் பெறுகிற சமூகம் அல்லது இனத்தை முழுமையும் ஒன்றிணைக்கும் நிகழ்ச்சிகளாக அமைகின்றன. மக்கள் அனைவரும் அவ்விழாக்களுக்கென விழாவின் முன்னரே திட்டமிட்டுச் செயற்படுகின்றனர். ஆடை அணிகள் எடுக்கின்றனர், ஆட்டங்கள் பழகுகின்றனர்; வேடிக்கைக்கு ஆயத்தம் செய்கின்றனர்; போட்டிகளுக்கு ஆயத்தமாகின்றனர்; வியாபாரங்களுக்கும் ஆயத்தமாகின்றனர்.

இவ்வாறு அச்சமூகம் அல்லது சமயம் முழுமையையும் ஒன்றிணைக்கும் நிகழ்வுகளாக இவ் விழாக்கள் அமைகின்றன.

இந்திரவிழா பற்றிய செய்திகள் சிலப்பதிகாரத்து முன்னுள்ள காலப்பகுதியில் விரிவாகக் கூறப்படவில்லை. சிலப்பதிகாரகாலத்தில் இவ்விழா பெருவிழாவாக அப் பிரதேசத்து அனைத்து மக்களும் பங்குபற்றும் விழாவாக அமைந்த இது சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகளினல் மிகவிரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரத்து இந்திர விழாவெடுத்த கதையும் கடலாடுகாதையும் இந்திர விழாவின் பல்வேறுபட்ட கொண்டாட்டங்களைக் காட்டுகின்றன. இதில் முதலாவதில் புகாரில் அது எவ்வாறுகொண்டாடப்பட்டதெனக் கூறப்படுகிறது. இவ்விழா இருபத்தெட்டு நாட்களுக்கு சகல மக்கட் குழுவினரும் சுறுசுறுப்புடனும் மகிழ்வுடனும் பங்குபற்றும் விழாவாக அமைந்தது.

### விழாவின் பண்பு

சித்திரை நட்சத்திரத்தோடு கூடிய சித்திரை மாதத்துப் பௌர்ணமியன்று தேவர் கோமானுகிய இந்திரனின்ஏவலினுற் காவல்செய்கின்றபூதத்திற்கு படையலைப் படைப்பதுடன் விழா ஆரம்பமாகும். இப்படையல் புழுக்கல், எள்ளுருண்டை, மாமிசம் கலந்த சோறு, பூ, வாசனைப் புகைகள். பொங்கல் என்பவற்றைக் கொண்டிருக்கும். அந்நேரத்தில் மூதிற்பெண்டிர், குரவையும் துணங்கையும் ஆடி அரசனைப் 'பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி நீங்குவர்.

அவ்வாறு நீங்க மறக்குடி வீரரும் படைவீரரும் நான் முந்தியோ நீ முந்தியோ எனப் பலிபீடிகைக்குச் சென்று, தங்கள் மன்னருக்கு உற்ற துன்பங்களை ஒழிப்பதற்காக வேண்டித் தமது தலையையே அறுத்துப் படைப்பர். அந்நேரத்தில் முரசுகள் ஒலிக்கும்,

வெள்ளிடைமன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கலி ஆநின்ற மன்றம், பூதச்சதுக்கம், பாவை மன்றம் ஆகிய இடங்களிலும் இவ்வாறன படையல்கள் நடந்து முடியும்.

இந்நிகழ்ச்சிகளின்பின் வச்சிரக்கோட்டத்தில் இருந்த முரசத்தை எடுத்துக் கச்சை யானையினன் பிடரியில் ஏற்றி ஐராவதம் கோவிலுக்குச் சென்று விழாவின் தொடக்கத்தையும் முடிவையும் அறிவிப்பர். அதன்பின்னர் கற்பகதரு இருக்கும் கோயிற் கொடி ஏற்றப்படும்.

இவ்வாருக இவ்விழா ஆரம்பிக்கப்பட்டபின் ஐம்பெருங் குருவும் (அமைச்சர், புரோகிதர், சேனுதிபதி, தூதுவர், சாரணர்) எண்பேராயரும், அரசரும், வணிகரும் வீரரும் யானைகளிலும், குதிரைகளிலும் காவேரிக் கரைக்குச் செல்வர். 1008 அரசகுமாரர் பொற்குடத்தே நீரேந்தி இந்திரனை அரசனை வாழ்த்தும்படி வேண்டி அபிஷேகஞ் செய்வர். விழாச் சடங்குகள் சிவன், முருகன். பலராமன், விஷ்ணு ஆகிய தெய்வங்கள் வீற்றிருக்கும் கோயில்களிலும் பௌத்த சமண கோயில்களிலும் நடைபெறும். அந்நேரத்தில் விஞ்சையனே இவ் விழாவைப் பார்ப்பதற்குத் தன்காதலியுடன் வருவான் எனப்படுகிறது.

அந்நேரத்தில் கொடித்தேர் வீதிகள் அலங்கரிக்கப்பட்டு தோரணங்களை உடையனவாய் இருக்கும். நிறைகுடங்கள் வைக்கப்படும். முழவுகள் ஒலிக்கும். நன்றுளாளர், குழல், தோல், நரம்பு வாத்தியங்களை இசைப்பர். இளந்தம்பதியர் இன்பத்தை அனுபவிப்பர்.

அவ்வேளையில் விஞ்சையனும் தன்காதலியுடன் இங்கு வந்து விழாக்காண்கிருன்.

### மாதவியின் ஆடல்

நாரதனின் யாழின் ஏழிசையும், தோரிய மடந்தையரின் வாசம்பாடலும், நாடகங்களும் இழந்து சாபத்தால் பூமியில் வந்த மாதவியின் ஆடல் காண இவர்கள் வந்தனர்.

அந்நேரத்தில் தேவர்பாணியும் (தேவாரம்) கருணப்பூதரைப் பரவும்பிட்டும், மதியத்தைப்பாடும் பாட்டுப்பாடி மாதவி பதினோராடல்களை ஆடுகிருள். அவள் பாண்டரங்கம், கொடுகொட்டி, அல்லியத்தொகுதி துடி, குடை, குடம், மல்லாடல், பேடியாடல், மரக்காலாட்டம், பாவைக்கூத்து. கடையக்கூத்து ஆகிய கூத்துக்களைப் பரதசாஸ்திரத்துள் விதித்துள்ள முறைப்படி ஆடுகிருள்.

விழாவின் இறுதி நாளன்று மாடங்கள் மலிந்த பீடிகைத் தெருவிலே தாசியர் மைவிளக்கோடே மாணிக்க விளக்குகளையும் எடுத்து மலரையும், அறுகையும் நெல்லையும் மங்க

(10-ஆம் பக்கம் பார்க்க)

அம்மன்கிளி முருகதாஸ்
(ஆசிரியை, மகளிர் கல்லூரி, சுண்டுக்குளி)

வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும்
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!
இராஜேஸ்வரி ஸ்ரோஸ் பிறேமா பான்சி பலஸ்
No. 16, புகையிரத நிலைய வீதி,
சுன்னுகம்.

வாடிக்கையாளர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் எமது புதுவருட
வாழ்த்துக்கள்!
மின்சார மோட்டர்கள்
மின் உபகரணங்கள்
சைக்கிள் உதிரிப்பாகங்கள்
பெற்றிட சிறந்த ஸ்தாபனம்
ஹப்பி எலெக்ரிக்கல்ஸ்
(மின் உபகரண ஏக விநியோகஸ்தர்களும், ஒப்பந்தகாரரும்)
கே. கே. எஸ். வீதி,
சுன்னுகம்.

இடர்கள் நீங்கி இனிய சுகம்பெற
வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும்
எமது புத்தாண்டு
வாழ்த்துக்கள்!
க. செ. கைலாசம்பிள்ளை
அன் சன்ஸ்
மருந்துச் சரக்கு வியாபாரம்
76, பெரியகடை,
யாழ்ப்பாணம்

நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள்!
சகல ஆங்கில மருந்து வகைகளை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய
சிறந்த ஸ்தாபனம்
இந்திரபாலாஸ்
பார்மஸி
108, கே. கே. எஸ். வீதி,
சுன்னுகம்
(பழைய பொலீஸ் நிலையம் முன்பாக)

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்களுக்கு
எமது உளங்கனிந்த புதுவருட வாழ்த்துக்கள்!
உங்கள் இல்லங்கள் பளபளக்க சகலவிதமான
மாபிள் கல்லு வகைகள், குளியலறை, கழிவறை மாபிள் பொருள்கள், மாபிள் பீங்கான், கப் & சோசர், டின்னர் செற், கோப்பை வகைகள் மற்றும் பரிசுப் பொருள்கள், P. V. C. பைப் வகைகள், S-Lon பைப் வகைகள், போமிக்கா, ஹாட்போட் வகைகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
சுன்னுகம் செரமிக் சேல்ஸ் சென்ரர்
இல. 116, கே. கே. எஸ். ரோட்,
சுன்னுகம்.
(பழைய பொலீஸ் நிலையம் முன்பாக)

நண்பர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் எமது அன்புகனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.
அண்ணு கோப்பியின் 100 கிராம் வெற்றுப் பக்கெட்டுகளில் 10ஐக் கொடுத்து
1 ரம்ளரை இனமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.




வாடிக்கையாளர்கள், நண்பர்கள்
அனைவருக்கும்
எமது புதுவருட வாழ்த்துக்கள்!
யாழ் நகரில் 13 வருட அனுபவம் கொண்ட
மிகவும் பிரசித்திபெற்ற
பல்கட்டிவரும், கண்பரிசோதித்து
கண்ணுடி வழங்கிவரும்
நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்
வி. ரி. அன் சன்ஸ்
உரிமையாளர்: Dr. S. Regi
(B. M. C. க்கு முன்பாக)
இல. 302, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பு ஆதரவு சிறந்து விளங்க
நண்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்
எமது புத்தாண்டு
வாழ்த்துக்கள்!
நவீன அழகிய தங்க
ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்
முருகன் ஆபரண மஹால்
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னுகம்.

புதுவருட வாழ்த்துக்கள்!
அன்பர்கள், ஆதரவாளர்கள்
மனம் குளிர்ந்திட
நாவுக்கு சுவையூட்டும்
தேனீர், பால்தேனீர், கோப்பி, பிடா
மற்றும்
சிற்றுண்டி வகைகள்
குளிர்பான வகைகளை
அருந்தி மகிழ ஓர் சிறந்த இடம்
செல்வ விலாஸ்
புகையிரத நிலைய வீதி,
சுன்னுகம்.

துன்பம் நீங்கி இன்பம் பெருகிட
நண்பர்கள் வாடிக்கையாளர்கள் மற்றும்
அனைவருக்கும் எமது
புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!
அல்டி
சகலவிதமான
● கைக்கடிகாரங்கள்
● சுவர்மணிக்கூடுகள்
பெற்றுக்கொள்ள யாழ் நகரில்
பிரசித்திபெற்ற ஸ்தாபனம்
★ அல்டி ★
We undertake
all kinds of Watches
for repairs
★ ALDI ★
269/1, Power House Road,
Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் புத்தாண்டுச் சிறப்பிதழ்


## சிவா ஸ்ருடியோ மானிப்பாய்

வாடிக்கையாளர்களுக்கு
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்




* மங்களகரமான வைபவங்களுக்கு
* நவீன முறையில் தரமான வீடியோ படங்களையும் கலர் புகைப்படங்களையும்
* சிறந்த முறையில் படம் பிடிப்பதற்கு

இன்றே விஜயம் செய்யுங்கள்.

SHIVA STUDIO
Manipay.

[10512]



புத்தாண்டு வாழ்த்துக்கள்

● குறைந்த சலாரில் எண்ணெய் வடித்துப் பெற்றுக்கொள்ள

மல்ரி ஒயில்
இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்

OIL MILLERS

காங்கேசன்துறை வீதி, இணுவில்.
[ இணுவில் ஆஸ்பத்திரி முன்புறம் ]



நண்பர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும்
எமது இனிய புத்தாண்டு
வாழ்த்துக்கள்!

இன்றைய நவநாகரிகத்திற்கேற்ற
வீட்டுத்தளபாடங்களுக்கும்
ARPICO சீஎஸ்ரு
மெத்தை வகைகளுக்கும் சிறந்த ஸ்தாபனம்

JAFFNA TRADING COMPANY
( Furniture Palace )

இல. 79, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


## புது வடிவு பெற்ற புத்தாண்டுக் கொண்டாட்டங்கள்

**பாரதிநேசன்**

இன்னொரு புத்தாண்டு வந்துள்ளது. மக்கள் மகிழ்ச்சியுடன் அதனை வரவேற்கின்றார்கள். கடந்த ஆண்டின் அவலங்கள் குறையும். இந்த ஆண்டு தம் வாழ்வில் சுடரொளி வீசும். இது அவர்களுடைய நம்பிக்கை.

நம்பிக்கைதான் மனித வாழ்வின் இரகசியம். நம்பிக்கை இன்றேல் வாழ்வே இல்லை. எத்தனையோ துன்ப துயரங்கள் எம்மை வாட்டுகின்றன. மழை இன்மையும் அவற்றுடன் சேர்ந்திருக்கிறது. வரட்சி ஒன்று எம்மை அச்சுறுத்துகின்றது.

ஆனால் புத்தாண்டில் எம்மவர்கள் நல்லது நடக்கும் என்றே எதிர்பார்க்கிறார்கள். இதுதான் எமது மக்களின் சிறப்பியல்பு.

புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் இப்பொழுது புதுவடிவம்எடுத்திருக்கின்றன. வழக்கமான உடுபுடைவைகளுடன் வீடியோ படம் இத்தியாதி. நவீன அம்சங்கள் புகுந்திருக்கின்றன 'புதியன புகுதலும் பழையன கழிதலும் வழுவல கால வகையினனே' என்று எவ்வளவு அழகாகப் பெரியோர்கள் கூறியிருக்கின்றனர்.

இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் சித்திரை வருடப் பிறப்பு என்பது எமது கிராமங்களில் பிரமாண்டமான தோர் விழாவாகக் கொண்டாடப்பட்டது. ஓரிரு நாட்கள்அல்ல, ஓரிருவாரங்கள் வருடப்பிறப்பு விழா தொடர்ந்து நடைபெற்றது.

அப்பொழுது எமது மக்கள் விவசாயத்துடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த படியால் விவசாயிகளும் அவர்களுக்கு உதவி செய்வோரும் விடுமுறை எடுக்கும்காலமாகப் புத்தாண்டு தினங்கள் விளங்கின.

எல்லோருக்கும் விடுமுறை உண்டு. ஆனால் விவசாயிகளுக்கு எங்கே விடுமுறை? இந்தக் கேள்விக்கு இயற்கை அளித்த பதில் தான் சித்திரைப் புத்தாண்டு.

நாளும் பொழுதும் நாலு முழத்தைக்'கொடுக்கு'க்கட்டி மண்ணோடு மல்லாடிக் கொண்டிருக்கும் விவசாயிகள், ஆண்களும், பெண்களும் குழந்தைகளும், புதிய 'சோமன்' வேட்டிகளும் சரிகைச் சேலைகளும் வண்ண வண்ணப் பாவாடைகளும் அணிந்து நெற்றியில் விபூதி பொட்டுடன் வீடு வலமும் வீதிவலமும் வந்த அந்த நாட்கள் மறக்கக் கூடிய நாட்களா?

அப்பொழுது புத்தாண்டு தினத்தில் பெரியவர்கள் மத்தியில் நடைபெற்ற முக்கியமான விஷயம் உறவினர்கள் நண்பர்களின் வீடுகளுக்குச் செல்வதாகும். இதில் முக்கியமானது கோபங் கொண்டு இருந்தவர்கள் ஒற்றுமையாகுவதாகும். புத்தாண்டு தினத்தில் வீட்டுக்கு வருவோர் வீட்டு முதியவர்களை வழிபடுவதும் வழக்கமாயிருந்தது.

புத்தாண்டு காலத்தில் பல்வேறு கிராமிய விளையாட்டுக்களும் நடைபெறும். போர்த் தேங்காய் அடித்தல், கிட்டி அடித்தல் ஆகியன இவற்றில் அடங்கும்.

புத்தாண்டு தொடங்கிய நாள் முதல் ஓரிரு வாரங்கள் குழந்தைகளுக்கு ஒரே குஷி. எப்பொழுதும் வீட்டில் அரியதரம், முறுக்கு முதலிய பலகாரங்கள் இருக்கும். போகும் வீடுகளில் எல்லாம் பலகாரம் கிடைக்கும்.

அது மட்டும் அல்ல, சின்னம்மா, பெரியம்மா, மாமா, மாமி என்று வீடுகளுக்குப் புது வருடப் பயணம் செய்யும் போது பரிசாகப் பணமும் கொடுப்பார்கள். அப்பொழுது இப்பொழுது போல் அல்ல, இருபந்தைந்து சதக் குத்தி, ஐம்பது சதக்குத்தி என்று கிடைத்து விட்டால் அது பெரிய பணம். இந்தப் பணத்தை எல்லாம் சேர்த்து ஒரு சில நாட்கள் குழந்தைகள் 'பணக்காரராக'த் திரிவார்கள்.

இதுவெல்லாம்அந்தக்காலம் இனிமேல் திரும்பி வராத நாட்கள்.

ஆனால் இன்றைய சித்திரைப் பொங்கலில் சிறப்புகள் இல்லையா?

சித்திரைப் பொங்கல் ஆரம்பத்தில் இந்துக்கள், புத்தர்களின் பொங்கலாகஇருந்தது. இப்பொழுது சித்திரைப் புத்தாண்டு எல்லோரினதும் திருவிழாவாக, பெருவிழாவாக அமைந்துள்ளது. அது தமிழர் திருநாள் என்று நாம் கூறும் போது இந்த வளர்ச்சியைத் தான் காண்கின்றோம். இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்களின் பெருநாட்களை மதிப்பதும் மாறி கிறிஸ்தவர்கள் இந்துக்களின் முஸ்லிம்களின் பெருநாட்களை மதிப்பதும் அப்படியே முஸ்லிம்கள் பிற மதத்தவரின் பெருநாட்களை மதிப்பதும் என்ற புதிய பண்பாடு ஒன்று ஆறுதலாக, ஆனால் நிதானமாக வளர்ந்து கொண்டிருக்கிறது இதுகாலத்தின் முன்னேற்றத்தைத் தொட்டுக் காட்டும் வளர்ச்சியாகும்.

இவற்றுடன் சேர்ந்து பெருநாள் பண்டங்களிலும் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அரியதரம்முறுக்கு, வாய்ப்பன் அருகி கேக்கும் மஸ்கட்டும் மாஸ்மெலோவும் வட்டலப்பம் என்றுபலகாரங்கள் செய்யப்படுகின்றன. அவையும்ருசியான உணவுப்பதார்த்தங்கள்தான். அதற்காக எமது பாரம்பரிய உணவு வகைகளைக் கைவிட வேண்டும் என்றில்லை.


## அமீர் ரெக்ஸ் அன்ட் ரெயிலரிங்

மீண்டும் அதி விமரிசையாக இயங்கிவரும்
அமீர் ரெக்ஸ் அன்ட் ரெயிலரிங் ஸ்தாபனத்தார்
தங்கள் வாடிக்கையாளர்களுக்கும் அன்பர்களுக்கும்
இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார்கள்.

யாழ்நகரிலே அதி நவீன தையல் ஸ்தாபனம்

★★★★★★★★ ★★★★★★★★

அமீர் ரெக்ஸ் அன்ட் ரெயிலரிங்

73, பெரிய கடை, யாழ்ப்பாணம்.



எம்மினிய நாட்டினிலே இன்பம் தழைத்திருக்க
உளங்களித்துப் பொங்கி வர உயர்ந்து
நீங்கள் வாழ்கவென

இப்புத்தாண்டில் வாழ்த்துகிறோம்

சகலவிதமான
* ஆங்கில மருந்துகள்
* ஆயுர்வேத சரக்குவகை
* கோவில் அபிஷேகத் திரவியங்கள்

மற்றும் நற்கருமங்களுக்கு ஏற்ற
பொருட்களையும் பெற

தினசரி வைத்திய சேவை
டாக்டர் பேரம்பலம் பத்மநாதன் (மாலை)
டாக்டர் சி. சிறிஸ்கந்தராஜா (மாலை)

தற்பொழுது சிறுபிள்ளை வைத்திய நிபுணரின்
சேவைப்பகுதி ஞாயிறு காலையில் நடைபெறுகின்றது

அத்துடன் மற்றும் வைத்திய நிபுணர்களின் ஆலோசனை சேவையையும் விரைவில் ஆரம்பிக்க இருக்கின்றோம் என்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்

தினசரி கால்நடை வைத்தியரின்
ஆலோசனையும் பெற்றுக்கொள்ளலாம்.

சித்தி மெடிக்கல் சென்ரர்
புகையிரதநிலைய றோட்,
மல்லாகம்.

Prop. N. Elamurugathas



வறுமை நீங்கி வளம் பெருக எல்லோருக்கும்
எமது அன்பு கலந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்!

● தரமான பொருள்
● அளவான நிறை
● மலிவான விலை

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.

★

சுன்னாகத்தில் பலசரக்கு வியாபார முன்னோடிகளான

பாலன் ஸ்ரோர்ஸ்
கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.



வாடிக்கையாளர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது அன்புகனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்

**லங்கம் விநியோகப் பொருள்கள்**
விவசாய இரசாயனம் (லங்கம்)
ரொபிளாக் பெயின்ற் (லங்கம்)
ரேப்பன்ரைன்
ரின்னர்

**ஜலன் கொன்சிமர்**
பபுல் வோசிங்பவுடர்
ரீ போல்
சம்ஸ் யாம்
சம்ஸ் கோடியல்
பென்சன் ரொபி

**பவர் தெளிகருவி**

**சிங்கர்**
தெளி கருவி
மேடைத் தராசு
தூக்குத் தராசு
நீர் இறைக்கும் இயந்திரம்
மின்சார (ஜெனரேட்டர்)

மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்பவர்கள்

V. வடிவேல்

லங்கம் பிராந்திய விற்பனவு நிலையம்
219, 221, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் புத்தாண்டுச் சிறப்பிதழ்

எமது வாடிக்கையாளர்களுக்கும், நண்பர்களுக்கும்

இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!

சகலவிதமான டிசைன்களும் ஓடருக்குச் செய்து கொடுக்கப்படும்.
வட இலங்கையில் மூன்று தலைமுறையாகச் சேவையாற்றி வரும்
ஒரே ஒரு ஸ்தாபனம்

யப்பான் ஜுவலர்ஸ்

(க. ஆறுமுகம்பிள்ளை அன் சன்)

64, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி; 22518 (C/1094)

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கட்கு
எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

வீடியோ படப்பிடிப்பு மற்றும் T. V. டெக், வீடியோ கமரா பழுது பார்த்தலில்
முன்னணியில் திகழும் எவர் விஷன் ஸ்தாபனத்தார்
புத்தாண்டில் புதிய பல சேவைகளை அறிமுகப்படுத்துகின்றார்கள்.

★ வெளிநாடுகளிலிருந்து வரும் NTSC SECAM முறையிலுள்ள வீடியோப் படங்களை நமது நாட்டு PAL SYSTEM முறைக்கு மாற்றித் தரப்படும்,
★ வீடியோ படங்களிலிருந்து கலர் போட்டோக்கள் எடுத்துத் தரப்படும்.
★ கலர் போட்டோக்களை வீடியோவிற்கு மாற்றித் தரப்படும்.
★ இவை யாவற்றுக்கும் நவீன உபகரணங்கள் பாவிக்கப்படுகின்றன.

விபரங்களுக்கு நேரில் வரவும்.

குறிப்பு: கலர்படச் சுருள்கள் கொழும்பில் கழுவித் தரப்படும்.

எவர் விஷன்

21A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது

புத்தாண்டு நல் வாழ்த்துக்களைத்

தெரிவித்துக் கொள்கின்றோம்.
நாட்டின் செழிப்புக்கு உறுதுணையாக விளங்கும் விவசாயப்
பெரு மக்களே! உங்களுக்கோர்
புத்தாண்டு நற்செய்தி
உங்களுக்கு தேவையான தரமான
லங்கெம் விவசாய இரசாயனப் பொருட்களையும் மற்றும்
லங்கெம் உற்பத்திப் பொருட்களையும் பெற
நீங்கள் நாட வேண்டிய ஸ்தாபனம்

⁂ புஸ்பா அன் கோ ⁂

128, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

✶ மேலும் எமது ஸ்தாபனம் ரங்ஸ்சம் மின்குமிழ்களுக்கு
ஏக விநியோகஸ்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளது
என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

## சுக்கில ஆண்டை வரவேற்போம்!

சுக்கில ஆண்டைப் பூவும், அட்சதையும், சுகந்தமும், மஞ்சளும், சந்தனமும், குங்குமமும் கொண்டு வணங்கி வரவேற்போம்.

மாவிலைத் தோரணங்கள் நாற்றி, அலகிட்டு, மெழுக்கு மிட்டு, கோலம் போட்டு, வாழை, கமுகு, இஞ்சி, மஞ்சள் பொலிய, பொங்கி, புத்தாடையணிந்து, பூரண பொற்குடம் ஏந்தி, மங்கள விளக்கொளிர, இறைவனைப் பிரார்த்தித்து, பரிசுத்த உள்ளங்களோடு, உலகம் வாழ வணங்கி வரவேற்போம்.

பஞ்சாங்கமாகவும் அட்டாங்கமாகவும் எம்மண்ணிற் படிய சிரந்தாழ்த்தி, கரங் கூப்பி, மனம் மகிழ்ந்து வரவேற்போம்.

வாழ்க வையகம், வாழ்க வளமுடன்.

முருக. வே. பரமநாதன்

## சித்திரைத் தாயே மகிழ்வு தருவாய்!

சித்திரை வருவாள் – எங்கள்
சிந்தையில் மகிழ்வு
தருவாள்
நித்திரை போதும் மக்காள்!
நிமலனைத் தொழுவோம்
வாரீர்!
இத்தனை துயரும் போதும்
– எமை
இனிமேலும் வதைக்க
வேண்டாம்
அத்தனை தமிழ் மக்களும்
– என்றும்
அன்புடன் இணைந்து
வாழ்வோம்.

—தர்சினி

## சித்திரை..,

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லமாகச் சிந்தியிருப்பர்.

### கடல் நீராட்டம்

கடற்கரைக் ச் செல்லும் வழியிலே பலவகை வியாபாரங்கள் விழாவின் பொருட்டு நடைபெறுகின்றன. எழுது வண்ணம், சந்தனம், மலர், சுண்ணம் (பவுடர் வகை)என்பனவும் பலகாரங்களும் விற்கப்படுகின்றன. பிட்டு, அப்பம் மாமிசப் பண்டங்கள், மீன்கள் என்பனவும் அங்கு விற்கப்படுகின்றன. கடற்கரையில் அனைவரும் நீராடுகின்றனர். அரசர், சுற்றத்தினர், வணிகர், ஆடல் மகளிர், பாடல் மகளிர் எல்லோரும் அங்கு நீராடுகின்றனர். அதனால் கடற்கரையெல்லாம் பேரோசையாய் ஒலிக்கிறது.

இக்கடல் நீராடுவதுடன் இந்திரவிழா முடிவெய்துகிறது. கோயில்களில் நடைபெறும் தீர்த்தத் திருவிழா இதனை ஞாபகமூட்டுவது தவிர்க்க இயலாததாகிவிடுகிறது.

இச் சித்திரை மாதத்து இந்திரவிழா சித்திரை வருடப் பிறப்புடன் ஆரம்பிக்கிறது என்று கூறுவோருமுளர். எனினும் அது தவறு என்று கூறப்படுகிறது. இந்தியாவில் கொண்டாடப்படும் சித்திரா பௌர்ணமியும் இலங்கையின் சித்திரைப் பூரணையும் இதனுடன் தொடர்புடையதாகலாம்,

ஆதரவாளர்கள் நண்பர்கள்
எமது முகவர் நிலையம்மூலம் வெளிநாடு சென்றவர்கள் செல்ல இருப்பவர்கள்
அனைவருக்கும் எமது அன்புகனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்!

நியூ யோர்க் ரவல்ஸ்

கே. கே. எஸ். வீதி மல்லாகம்
(ஜொனி வீடியோ அருகாமையில்)

மலரும் இப்புத்தாண்டில் மக்கள் அனைவரும்
சுபீட்சமும் நல்வாழ்வும் பெற எமது நல்லாசிகள்!

வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள், அன்பர்கள், நகைப்பிரியர்கள்
அனைவருக்கும் எமது உளங்கனிந்த

புத்தாண்டு வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

செல்லையா சிவபாதலிங்கம்

வைரக்கல் நகை வியாபாரம்
புதுப்பொலிவுடன் 22 கரட்டில் ஓடர் நகைகளை
குறித்த தவணையில் விரும்பிய டிசைன்களில்
செய்து கொள்ள



CHELLIAH SIVAPATHALINGAM
JEWELS MERCHANT

218 - A கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23794

பலதும் கற்று பெருவாழ்வு வாழ இப்புனித ஆண்டில்
காலடி வைக்கும் ஒவ்வொருவருக்கும் எமது
புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்
★ கம்பியூட்டர் கல்வி ★

COMPUTER DIPLOMA
COMPUTER PROGRAMMING IN

| COURSE | DURATION | COMMEN-CEMENT | TIME | DAY |
|---|---|---|---|---|
| Basic | 4 Months | 23 - 04 - 89 | 10.30 | Sat & Sun |
| Basic | 3 Months | 10 - 05 - 89 | 01.00 | Mon. Wed & Friday |
| d Base III + | 2 Months | 30 - 04 - 89 | 10.00 | Sat & Sun |
| Lotus 1, 2, 3 | 2 Months | 16 - 05 - 89 | 09.00 | Tues & Thurs |
| Cobol | 3 Months | 30 - 04 - 89 | 10.00 | Sat & Sun |
| Word Processing | 2 Months | 30 - 04 - 89 | 08.30 | Sat & Sun |

QUALIFICATION: G. C. E. (O/L)
PRACTICAL ON I. B. M. (COMPATIBLE)
JOIN WITH US TO STUDY LATEST COMPUTER TECHNOLOGY.

UNIKCO COMPUTER CENTRE
No. 5, Power House Road, 2nd Lane,
JAFFNA.
(Near Sub - Post Office)

WE NEVER KNOW WHERE BUSINESS WILL TAKE YOU

But we are sure that "Lanka Cement"
will take you to build a "Sweet Home"

Head Office:

M/s LANKA CEMENT Ltd.,
130, W. A. D. Ramanayake Mawatha,
COLOMBO - 2

Lanka cement

● தரத்திற்கும் ● உறுதிக்கும்
"லங்கா சீமெண்ட்"
நாம் சொல்கின்றோம் பாவனையாளர்கள் உறுதிப்படுத்துகின்றார்கள்

★ லங்கா சீமெண்ட் லிமிட்டெட் ★
[illegible] வீதி, காங்கேசன்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் புத்தாண்டுச் சிறப்பிதழ்


✱ எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் ✱

கல்விச் சேவையின் முன்னோடி

**பேரடெனியா இன்ஸ்ரிரியூட்**

கொக்குவில்

ஆண்டு 6 லிருந்து 11 வரை

A/L கலை, வர்த்தக வகுப்புக்கள் யாவும் பிரபல ஆசிரியர்களால் சிறந்த முறையில் கற்பிக்கப்படுகின்றது.

[10529]



துன்பம் நீங்கி இன்பம் பெருகிட

நண்பர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் அனைவருக்கும்

**எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**

எப்பொழுதும் நீங்கள் விரும்பும்



**தங்க வைர நகைகளை**

திருப்தியுடன் பெறுவதற்கு உகந்த ஸ்தாபனம்

**ராணி ஜுவல்லர்ஸ்**

63, கன்னாதிட்டி, (R. G. பில்டிங்)

யாழ்ப்பாணம்.

★ ஆடர் நகைகள் ★

குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

Telephone: 23544


### பாரதி சொன்னவை

பேசாப் பொருளைப் பேச நான் துணிந்தேன்; கேட்கா வரத்தைக்கேட்க நான் துணிந்தேன்; மண்மீதுள்ள மக்கள், பறவைகள், விலங்குகள், பூச்சிகள், புல்பூண்டு, மரங்கள், யாவுமென் வினையால் இடும்பை தீர்ந்தே, இன்பமுற்றன்புடன் இணங்கி வாழ்ந்திடவே செய்தல் வேண்டும்; தேவ தேவா!

### ஞாயிற்றுக் குடும்பம்

ஞாயிறே, நின் முகத்தைப் பார்த்த பொருளெல்லாம் ஒளி பெறுகின்றன

பூமி, சந்திரன், செவ்வாய், புதன், சனி, வெள்ளி, வியாழன், யுரேனஸ், நெப்தியூன் முதலிய பல நூறு வீடுகள் - இவை எல்லாம் நின் கதிர்கள் பட்ட மாத்திரத்திலே ஒளியுற நகை செய்கின்றன. தீப்பந்திலிருந்து பொறிகள் வீசுவது போல், இவையெல்லாம் ஞாயிற்றிலிருந்து வெடித்து வெளிப்பட்டன என்பர். இவற்றைக் காலம் என்னும் கள்பன் மருவினர். இவை ஒளிகுன்றிப் போயின. ஒளி இழந்தனவல்ல. குறைந்த ஒளி உடையன. ஒளியற்ற பொருள் சகத்திலேயில்லை. இருளென்பது குறைந்த ஒளி.

### இன்பம்

உடல் நன்று.
புலன்சள் மிகவும் இனியன.
உயிர் சுவையுடையது
மனம் தேன். அறிவு தேன்.
உணர்வு அமுதம். உணர்வே அமுதம். உணர்வு தெய்வம்.


அன்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்

**எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்**

கிளைகள்:
ஜெயா அன் பிறதர்ஸ்
ரொரண்டோ, கனடா.
Tel: 416 960 9632
920 9226

குணம் வீடியோ சென்ரர்

கமலா ஸ்ரோர்ஸ்
ஜெயா வீடியோ
10, நியூ மாக்கற்,
வவுனியா.
Tel: 2368

என்றும்

**தரமான தமிழ், ஆங்கிலம், இந்தி திரைப்படங்களை வீடியோ கசற்றில்**

வாடகைக்குப் பெற்றுக்கொள்ளவும்

**மற்றும் பழைய, புதிய திரைப்படங்களை உடனுக்குடன் ஒரிஜினல் பிரதிகளில் றெக்கோடிங்**

செய்து பெற்றுக்கொள்ளவும்

**திரைப்படங்களின் போஸ்ரர்களை**

பெற்றுக்கொள்ளவும்

**என்றும் தரமானதையே எதிர்பார்ப்பவர்கள்**

நாடவேண்டிய இடம்:

யாழ்நகரில்

**குணம் வீடியோ சென்ரர்**

மகேஸ் வீடியோ சென்ரர்
பாரிஸ், பிரான்ஸ்.

42, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 23665

ராஜன் வீடியோ சென்ரர்
டென்மாக், நெதர்லாந்து.
Tel: 808 388



## அன்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு எமது புதுவருட வாழ்த்துக்கள்!

"ஷப்ரு" வழங்கும் புதிய வட்டி வீதம்

**நிலையான முதலீட்டுத் திட்டம்**

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

**நிறுவனத்தின் நிதி நிலை விபரம்**

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4.365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,336 | 3,030,474 | 5,485,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,386 | 100,577,482 |
| வங்கிக் கடன்கள் | 1 791,516 | 8,283,818 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,878 |
| வரிசெலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்தியபின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

**நம்பிக்கையுடன் சேமிக்க "ஷப்ரு"வை நாடுங்கள்**

**நிதித்துறையில் உங்கள் நண்பன் அவனே!**

பணிப்பாளர் சபை

திரு. எல். ஈ. கருணரத்ன,
சட்டத்தரணி, சமாதான நீதிவான்
(தலைவர்)

திரு. ஜே. டி. நவரட்ணம்,
(A. I. B Lond.).
பொது முகாமையாளர்

திரு. எஸ். பாலசுப்பிரமணியம்
(A. I. B. Lond.),
முகாமைப் பணிப்பாளர்

திரு. ஏ. எம். எச். பாரி
(B. A. Hons.)

திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

# SHABRA

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22073, 24805

61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு -4
தொலைபேசி: 589310, 500576


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் புத்தாண்டுச் சிறப்பிதழ்


எமது
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

SkyRose

நீங்கள் விரும்பிய புதிய, பழைய

**பக்திப் பாடல்கள்**

STEREO முறையில் இசைத்தட்டுகள்மூலம் ஒலிப்பதிவு செய்து கொள்ளவும்

புதிய பழைய பக்திப் பாடல்கள், கிறிஸ்தவ முஸ்லிம் பாடல்கள், திரைக்கதை வசனங்கள், நகைச்சுவை நாதஸ்வரக் கச்சேரிகள் மற்றும் ஹிந்தி ஆங்கிலப் பாடல்களையும் இசைத்தட்டுக்கள் மூலம் பதிவு செய்ய, கசற்றுக்களை உடனுக்குடன் பெற்றுக் கொள்ள!

யாழ் நகரில் ஒரே ஸ்தாபனம்:

**ஸ்கைரோஸ்**

கலர் பிலிம் சுருள்கள். கழுவிக்கொள்ளவும் வீடியோ ஓடியோ,கசற்றுக்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும்-

ரீ. வி. வீடியோ, றேடியோ, மணிக்கூடுகள்மற்றும் எலெக்ரோனிக் பொருள் களைத் திருத்திக்கொள்ளவும்-

**ஸ்கைரோஸ்**

இல. 1, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

[சி/2264]



துன்பம் நீங்கி எல்லோரும் இன்புற்றிருக்க

மலரும் இப் புத்தாண்டில்

மக்கள் அனைவரும் சுபீட்சமும் நல்வாழ்வும் பெற
எமது நல்லாசிகள்!



சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ்

சாயி அடியாருக்கு நாம் அடியோம்
சத்தியசாயிபாபாவின் பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்க
சாயிபாபாவின் தரிசனம் பெற,
யாத்திரைகள் மேற்கொள்ள
சகல ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.

**★ சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ் ★**

தலைமையகம்:
33, 1ஆவது மாடி
நியூ ஜெமினி காம்பிளக்ஸ்,
மவுண்ட் ரோட், சென்னை - 6
போன்: 475382

கிளை:
24/1, பெரியகடை வீதி,
அங்கிளின் மேல்மாடி,
(பஸ் ஸ்ராண்ட் அருகாமை)
யாழ்ப்பாணம்.


## நாங்களும் காணுதல் கூடுமா?

முடிவிலாச் சாலையில்
குறியிலா தோடியே
முறிகிறோம் சித்திரைப் பெண்ணே!
அடியிலா முண்மரம்
விழுதிடப் பனியிலே
அலைகிறோம் சித்திரைப் பெண்ணே!
நெறியிலாப் பொய்யிருள்
மெழுகிடும் பாதையைத்
தொழுகிறோம் சித்திரைப் பெண்ணே!
அறிகுவை யாதலின்
அணைத்துநிம் மதியினைத்
தருவையோ சித்திரைப் பெண்ணே!

பெருவெளிக் கொண்டலில்
பொசுக்கிடும் தீயினைப்
பொதிகிறோம் சித்திரைப் பெண்ணே!
கருவிறைத் தெய்வமும்
கலங்கிடக் கண்களைக்
கட்டினோம் சித்திரைப் பெண்ணே!
நெறிவழிப் பாதையில்
நெருஞ்சிமுட் காட்டினை
நிறுத்தினோம் கித்திரைப் பெண்ணே!
அறிகுவை யாதலின்
அணைத்துநிம் மதியினைத்
தருவையோ சித்திரைப் பெண்ணே!

மாலைகள் சூடுவார்
மையிருட் போலியர்
மயங்கினோம் சித்திரைப் பெண்ணே!
மூலையில் வாடுவார்
மறித்திடும் வேலியர்
மலைக்கிறோம் சித்திரைப் பெண்ணே!
சாலையில் ஊறிடும்
செந்நிறத் தாறுகள்
சறுக்குதே சிதித்ரைப் பெண்ணே!
காலையை நாங்களும்
காணுதல் கூடுமோ?
கனிவையோ சித்திரைப் பெண்ணே?

— நிம்மதி —




**வாடிக்கையாளர்கள்! நண்பர்கள்!!**
மற்றும் அனைவருக்கும் எமது உளம் நிறைந்த
புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

*A. K. R. Mill*
URELU.

யாழ்நகரில் என்றென்றும் பலவிதமான,
தரமான அரிசி வகைகள்
விநியோகஸ்தர்கள்.

ஏ கே ஆர்
உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்

Mannakaladdy Lane,
Urelu West,
Urelu.

(10518)



**புதுவருட வாழ்த்துக்கள்**

திறமை வாய்ந்த கமரா திருத்த
வேலைகளுக்கும்

சகல விதமான ஸ்டில் கமராக்கள், வீடியோ கமராக்கள் எலெக்ரோனிக் பிளாஸ் வேலைகளுக்கும் மற்றும் பைனகுலர்ஸ், துணைக்கருவிகளும் புகைப்படம் பிடிக்கவும்

40 வருட அனுபவம் பெற்ற ஸ்தாபனம்

**ரகு போட்டோ டெக்னிக்**

187/6, கில்னர் ஒழுங்கை,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

(10549)



வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்களுக்கு

**எமது புதுவருடச் செய்தி**

நாம் அச்சடிப்பதற்குத் தேவையான சகல புளக்குகளையும் செய்ய ஆரம்பித்துள்ளதால், நினைவு அஞ்சலி நோட்டீஸ், நினைவு மலர் புத்தகங்கள் அச்சிட விரும்புபவர்கள்; இரண்டு இடங்களுக்கு அலைந்து திரியாமல், எம்மிடம் புளக்கையும் செய்து பிரசுரத்தையும் அச்சிட்டுக் கொள்ளலாம்.

அத்துடன் புடைவைக் கடை பைகளும் புதுப்புது டிசைன்களில் புளக்குகள் போட்டு அச்சிட்டுக் கொடுககப்படும்,

ஆரம்பம்:1935 தொலைபேசி:22689

ஸ்ரீ பார்வதி அச்சகம்
Sri PARWATHI PRESS

536, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். பெரிய ஆஸ்பத்திரிக்கு முன்பாக) [C/2098]



வாடிக்கையாளர்களுக்கும், நண்பர்களுக்கும்

**எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்**

★ கோயில் அபிஷேகம், திருவிழாக்கள்
★ திருமண விழாக்கள்
★ புதுமனைப் பிரவேசம்
★ புதுமனைக்கு அத்திவாரமிடல்

முதலிய வைபவங்களுக்கு தேவையான

O அபிஷேகத் திரவியங்கள் O விளைவு சூடம் O சாம்பிராணி O வாசனைதிகள் O ஊதுபத்தி

முதலிய சகல பொருட்களும்

சந்தனம் குங்குமம் சுத்தமான நெய் முதலியனவும்
தங்கள் திருப்திக்கேற்ற வகையில் மலிவாக எம்மிடம் கிடைக்கும்.

● சவ்வரிசி ● சேமியா ● நெல்லி கிறஸ் ● பாதாம் பருப்பு ● பச்சைச்சந்தனம் ● சித்த ஆயுள்வேத மருந்துகள் ● கோரோசனை ● கஸ்தூரி ● குங்குமப்பூ ● மருந்துச்சரக்குகள்

வைத்தியர்களுக்கும் வியாபாரிகளுக்கும் தகுந்த கமிஷன் வழங்கப்படும்.

**எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி**

(மருத்து, மருந்துச் சரக்கு, வாசனைதிகள் வியாபாரம்)

53, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22541

160, செட்டியார் தெரு,
கொழும்பு - 11
தொலைபேசி: 35825


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:**

அன்பின் விழையார் பொருள் விழையும் ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும்.

**பொருள்:**

அன்பினால் விரும்பாமல் பொருள் காரணமாக விரும்புகின்ற பொது மகளிர் பேசுகின்ற இனியசொல், ஒருவனுக்குத் துன்பத்தைக் கொடுக்கும்,


உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
14- 04 - 1989 த. பெ. இல: 23


# வருக, புத்தாண்டே!

இன்று தமிழ்ப் புத்தாண்டு. சித்திரைப் புதுவருடம். விபவ ஆண்டு கழிந்து சுக்கில வருடம் மலர்ந்திருக்கிறது.

கால வட்டத்தை அறுபது ஆண்டுகளாகப் பிரித்து, வகுத்து, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பெயரிட்டு அழைத்தனர் அக்காலத்து வானியல் - சோதிடவியலாளர்கள். அறுபது வருடங்களில் மூன்றாவதே சுக்கில ஆண்டு.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் கடந்த பல ஆண்டுகள் சோதனைகளும், வேதனைகளும் மலிந்த வருடங்களாகவே கழிந்தன.

அடக்கு முறையிலிருந்து விடுபட்டுத் தங்களுக்கு உரிய உரிமைகளுடன் வாழ வேண்டும் என்ற அவர்களது சுதந்திர வேட்கை, அவர்களுக்குப் பல விதங்களிலும், பல வகைகளிலும், பல பக்கங்களாலும், தொல்லைகளையும், துன்பங்களையும் கொடுத்தது.

அவற்றின் விளைவாக அவர்கள் வாழ்க்கையில் நிம்மதி, அமைதி, பாதுகாப்பு உட்படப் பலவற்றை இழந்து, நிர்க்கதிக்கு ஆளானார்கள். பல கட்டங்களில், சந்தர்ப்பங்களில் உயிராபத்தைச் சந்தித்து, இல்லிடங்கள் உட்பட உடைமைகளை இழந்து அகதிகள் ஆனார்கள்.

சுதந்திரம், உரிமைகளுடன் கூடிய வாழ்வு என்ற இலட்சியத்திற்காக, அதற்கான வேள்வித்தீயில் லட்சக்கணக்கான தமிழர்கள், குறிப்பாக இளம் சந்ததியினர் ஆகுதியானார்கள்.

எனினும் வேள்வியின் பலாபலன்கள் இன்னமும் கைக்கு எட்டவில்லை. கழிந்த, கடந்த விபவ ஆண்டின் கடைசி நாளான நேற்றுவரை, தமிழர் வாழ்வில், துன்பமும் தயரமும், சோதனைகளும் வேதனைகளும், அச்சமும் அமைதியின்மையும், அழிவும் அனர்த்தமும், அடக்குமுறையும் அராஜகமும், அநீதியும் அதர்மமும் தொடரவே செய்தன.

பழையன கழிந்து புதியனவற்றை எதிர்கொள்ளும் போது அல்லது கைக்கொள்ளும் போது, நம்பிக்கை என்ற நல்லொளி மனிதனின் மனத்தில் சுடர்விட்டுப் பிரகாசிப்பது இயல்பு. அந்த நம்பிக்கை என்ற மூல வேரில்தான் ஒவ்வொரு மனிதனது வாழ்க்கை என்ற மரமும் அடிவிட்டு, கிளைபரப்பி, கொடி எறிந்து, மலர் சொரிந்து, காய்த்துக் கனிகின்றது.

எனவே, இன்றைய புத்தாண்டு தமது வாழ்க்கைப் புத்தகத்தில் புதிய அத்தியாயத்தை விரித்து, நல்லன செய்ய வேண்டும் என்று ஈழத்தமிழர் மனம் விரும்புவதும், ஏங்குவதும் இயல்பே.

பிறக்கும் சுக்கிலப் புத்தாண்டில்—

தமிழர் வாழ்வில் —

அன்பும் அமைதியும், சாந்தியும் சமாதானமும், அருளும் அறமும், நீதியும் நிம்மதியும், தர்மமும் தனமும், ஒற்றுமையும் சௌஜன்யமும், மலர வேண்டும் என்று இறைஞ்சுவோமாக. அவை நோக்கி ஒருமனப்பட்டு நடைபோட முயற்சிகள் செய்வோமாக. வருக புத்தாண்டே! எங்களை வாழவை! என்று வரவேற்போமாக!!

இனம் வாழ, தமிழ் மக்கள் வாழ இதயசுத்தியுடன், நேரிய மனதுடன் உரியபாதை சென்று உழைக்க ஒவ்வொருவரும் புத்தாண்டுச் சங்கற்பம் செய்வோமாக.

வான் சிறந்து, மண் செழித்து வளம் கொழித்து, அரசியல் விடிவு கண்டு, பொருளாதார சுபிட்சம் பெற்று, அறம் நிலைத்து, மக்கள் வாழ்வு மலர்ந்து நிறைவுபெற அருளாட்சி கேட்டுப் பணிவோமாக.

# வெளிநாட்டுக் கடனே இல்லாத நாடு ருமேனியா என்று அறிவிப்பு!

## ஜனாதிபதி வெளியிட்ட ஆச்சரியத் தகவல்

புக்காஹஸ்ட், எப்ரல் 13

சகல வெளிநாட்டுக் கடன்களையும் திருப்பிக் கொடுத்து விட்டதாக கம்யூனிஸ்ட் நாடான ருமேனியா நேற்று அறிவித்தது.

ருமேனியாவின் ஜனாதிபதி இந்தகவலை நேற்று வெளியிட்டார்.

கம்யூனிஸ்ட் கொள்கைகள் காரணமாகவே கடன்கள் அனைத்தையும் திருப்பிக் கொடுக்க முடிந்ததாக ஜனாதிபதி தெரிவித்தார். கம்யூனிஸ்ட் பொருளாதாரக் கொள்கைக்குக் கிடைத்த பெரிய வெற்றி இது என்றும் அவர் வர்ணித்தார்.

1980 ஆம் ஆண்டில் ருமேனியாவுக்கு 11 லட்சம் கோடி டாலர் வெளிநாட்டுக்கடன்கள் இருந்தன.

அவ்வளவு கடன்களும் இந்த ஆண்டு இறுதிக்குள் தீர்க்கப்பட்டு விடும் என்று முன்னர் ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

நேற்று திடீரென்று சகல வெளிநாட்டுக் கடன்களும் திருப்பிச் செலுத்தப்பட்டு விட்டதாக ஜனாதிபதி அறிவித்தது பெரிய ஆச்சரியத்தை ராஜதந்திர வட்டாரங்களில் ஏற்படுத்தியது.

### ருமேனியா நாடு பற்றிய விபரம்

சனத்தொகை: 2 கோடி 28 லட்சத்து 7,600'

விஸ்தீரணம்: 2 லட்சத்து 37 ஆயிரத்து 500 சதுர கி.மீ

இனவிகிதாசாரம்;

ருமேனியன் - 88·5வீதம், ஹங்கேரியர் - 7·8 வீதம், ஏனையோர் - 3·7 வீதம்.

மத அடிப்படையில்: ருமேனிய கிறிஸ்தவர் 70 வீதம், கிரேக்க கிறிஸ்தவம் 10வீதம், முஸ்லிம் 1·0 வீதம், நாத்திகர்கள் 7 வீதம், ஏனையோர் 3 வீதம், மதமே இல்லாதவர்கள் 9 வீதம்,

சனத்தொகையில் 50.8 சதவீதமானோர் நகரப்புறத்திலும் 49·2 சத வீதமானோர் கிராமப் புறத்திலும் வாழ்கின்றனர்.

ருமேனியா, கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் நாடுகளில் ஒன்று! ஆனால் சோவியத் யூனியனின் தலைமையை ஏற்காத நாடு இது. (ம)

# ஜோர்ஜியாவில் அமைதி திரும்ப கோர்பச்சேவ் நடவடிக்கை!

சோவியத் தலைவர் மிக்கெய்ல் கோர்பச்சேவ் ஜோர்ஜியா மாநில மக்களுக்கு விடுத்த வேண்டுகோளில் அமைதி பேணும்படி கேட்டுக் கொண்டார்.

கூடுதல் தன்னாட்சி அதிகாரம் கோரி ஜோர்ஜியா மாநிலத்தின் தென்பகுதியில் நடந்த ஆர்ப்பாட்டங்களில் 19 பேர் கொல்லப்பட்டனர்.

அதைத் தொடர்ந்தே சோவியத் தலைவர் தனது வேண்டுகோளை விடுத்தார்.

பூரண சுதந்திரம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையைப் பொறுத்துக் கொள்ள முடியாது என்று திரு. கோர்பச்சேவ் தனது உரையில் தெரிவித்தார்.

மாநிலங்களின் சுதந்திரக் கோரிக்கைகள் சோவியத்தின் சோஷலிசக் கட்டமைப்பையே சீர்குலைத்து விடும் என்றும் திரு. கோர்பச்சேவ் எச்சரித்தார். (எ)

## மத்திய தரைக் கடலில் வைத்து:

# சிரியா ஹெலிக்கொப்டர்கள் ரஷ்யக் கப்பல் மீது தாக்குதல்

இரண்டு சிரிய ஹெலிக்கொப்டர்கள் நேற்று மத்திய தரைக்கடலில் சோவியத் யுத்தக் கப்பல்கள் மீது தாக்குதலை நடத்தின.

இதில் 7 பேர் காயமடைந்தனர்.

மாஸ்கோ பத்திரிகை 'ரெட் ஸ்டார்' இச்செய்தியை வெளியிட்டது.

தாக்குதல் நடத்தப்பட்டதற்கான காரணத்தை அறிவதில் சோவியத் அதிகாரிகள் ஈடுபட்டிருக்கின்றனர் என்றும் அப்பத்திரிகை தெரிவித்தது. (எ)

# பாக் - ஆப்கன் எல்லையில் ஐ.நா இராணுவ அவதானிகள்

## பாகிஸ்தான் இணக்கம்

வாஷிங்டன், ஏப்ரல் 12

பாகிஸ்தான் ஆப்கனிஸ்தான் எல்லையில் ஐ. நா இராணுவ அவதானிகளை நிரந்தரமாக நிறுத்த பாகிஸ்தான் அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

ஐ. நா பாதுகாப்புச் சபையில் பாகிஸ்தான் பிரதிநிதி இதனை அறிவித்தார்.

ஆப்கன் பிரதிநிதியான வெளியுறவு அமைச்சர் அப்துல் வாக்கில் பேசுகையில், ஆப்கன் கெரில்லாக்களுக்கு பாகிஸ்தான் தொடர்ந்து உதவுவது முழு அளவு போரையே கொண்டு வரும் என்று எச்சரித்தார்

பாகிஸ்தானில் 100 முகாம்களில் கெரில்லாக்களுக்கு பயிற்சியளிக்கப் படுவதாகவும் பாகிஸ்தான் படையினரும் கெரில்லாக்களுடன் சேர்ந்து போராடுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (எ)

# வன்செயலாளரை கண்டறிய வீடியோ படத்தை திரையிடுக!

## ஹண்டே வேண்டுகோள்

தமிழக அரசியலில் நிலவும் பதற்றத்தைத் தணிக்க சட்டசபை அமளிதுமளிக்குப் பொறுப்பானவர்களைத் தண்டிக்க வேண்டும்.

அ.தி.மு.க. துணைப்பொதுச் செயலாளர் டாக்டர் எச். வி. ஹண்டே முன்கண்டவாறு தெரிவித்தார்.

சட்டசபை வன்செயல்களை மாநில திரைப்படப் பிரிவு, தூரதர்ஷன் ஆகியன படம் பிடித்தன. அப்படங்களைத் திரையிட்டுப் பார்த்தால் வன்செயல்களுக்கு யார் காரணம் என்பது தெரியவரும் என்றும் திரு ஹண்டே மேலும்சொன்னார். (எ)

# 1999இல் இந்தியாவில் படிப்பறிவற்றவர்கள் 65 கோடி

திருச்சூர் எப்ரல். 13

1999 ஆம் ஆண்டு இறுதியில் இந்தியாவில் படிப்பறிவற்றவர்கள் எண்ணிக்கை 65 கோடியாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனதா எம். பியும் பிரபல வழக்கறிஞருமான திரு. ராம் ஜெத்மலானி இத்தகவலை கேரளா மாநிலத்தில் கொடுங்சனூரில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் வெளியிட்டார்.

இந்த எண்ணிக்கை நாட்டின சனத்தொகையில் 60 சதவீதம் என்றும் அவர் தெரிவித்தார். (எ)

# இடைத்தேர்தல்

இஸ்லாமபாத், ஏப்ரல் 13

பஞ்சாப் மாகாண சட்டசபைக்கு நடந்த இரண்டு இடைத்தேர்தல்களில் ஒன்றில் ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சி தோற்றது; இன்னொன்றில் வெற்றியீட்டியது. (எ)

# அன்பரை உள்ளுருக்கி சிவானந்த பரவச நிலை அடையச் செய்யும் மானிப்பாய் மருதடி விநாயகர்

## இன்று தேர்த் திருவிழா

விபவ ஆண்டு பங்குனி மீ 16ஆம் திகதி 29-3-89 புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சுக்கில வருடம் சித்திரை மாதம் 2ஆம் திகதி (15-4-89) சனிக்கிழமை தீர்த்த உற்சவத்துடன் முடிவுறும் அருள்மிகு மருதடி விநாயகர் திருவிழா வைபவம், அன்பரை உள்ளுருக்கி சிவானந்த பரவச நிலையை அடைவிக்கும் ஒன்றாகும்.

இக்காலகட்டத்தில் மருதடியானின் புகழ்பேசுவதும் சிந்திப்பதும், வந்திப்பதும் எம்மைக் கடைத்தேற்றும் வழிகளாம்.

இற்றைக்கு ஆயிரமாம் ஆண்டுகளுக்குமுன்னர் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் அரசி மாருதப்புரவீகவல்லி தனது குதிரைமுகம் மறைந்து எழில் முகம் அமைந்தபின் அமைந்த விநாயகர் ஆலயங்களைத் தொடர்ந்து மானிப்பாயிலும் மருதடியில் எம்பெருமான் விநாயகர் ஆலயம் உருவானது.

சிவயோகியார்ஒருவரால்பூசிக்கப்பெற்ற மகிமை வாய்ந்தவர் எம்பெருமான். மருதமரச்சோலையும் முன்னுள்ள பிள்ளையார் குளமும் காண்போரை இறைசிந்தனைக்கு வழிப்படுத்துவன.

நித்திய பூசைகளும் திருவிழாக்களும் சிறப்புற நடைபெறும் தலங்களில் இதுவும் ஒன்றாகும்.

அண்மைக் காலத்தில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் திருக்கோயிலைப் பெரிதும் பாதியாத தன்மை எம்பெருமானின் அருளாட்சி இங்கு நடைபெறுவதை நமக்கு உணர்த்தும்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமைந்த இத்தலத்தின் தலவிருட்சம் மருதமரம். மேற்கு நோக்கி அமர்ந்து திருவருள் பாலிக்கின்ற புதுமைமிக்க தலங்களில் இது மகிமைமிக்க ஒன்றாகும்.

கோயிலின் உட்பிரகாரத்தில் நிற்கும் தலவிருட்சத்தில் எம் பெருமான் தனது யானைமுகத்துடன் காட்சி அளிக்கின்றார். இக் காட்சியானது இறையுணர்வு குறைந்தவரையும், சமயநிந்தனைவாதிகளையும் சிந்திக்க வைத்து சீலர்களாக்கும் தன்மை உடையது.

அக்ஷய வருடம் தைமாதம் பிரதிட்டை செய்யப்பட்ட பஞ்சமுக விநாயகர் பெருமான் வருடப்பிறப்பன்று தேரில் அரோகணிக்கும் காட்சி காண்போரின் வினைகளைக் களையும் தன்மைத்தாம்.

விநாயகப் பெருமான் பரமேச்சுர வடிவத்தைக் கொண்ட போது, பஞ்சமுக விநாயகமூர்த்தத்தை கொண்டருளினார் என்பர். ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் ஆகிய ஐம்முகங்களோடு அவற்றுக்கமையக் கொண்ட பத்துத்திருக்கரங்களில் வலம் இடமாக முறையே சூலம், மழு, வாள், வச்சிரம், அக்கினி, அபயம், பாசம், மணி, சர்ப்பம், அங்குசம், என்பனவுங் கொண்டருளினார்.

தேரில் உலாவரும் பஞ்சமுக விநாயகரைக் கண்டு தரிசிக்க ஈழத்தில் வாழும் பலரும் கூடும் காட்சி காண்பதற்கு அரிய ஒன்று.

பாரத சண்டத்திற் பிறந்த அமர்ந்துள்ளார்.

மானிப்பாய்க்கோவிற்பற்று சிறக்க அருளாட்சி புரிபவர் இவர். சிந்தனையாளர்களையும் சன்மார்க் சிலர்களையும் இப்பதியிற் தோற்றுவித்தவர் இவரே! மானிப்பாய் என்றால் மருதடியானை நினையாதோர் ஒருவரும் இலர்.

வளம் கொண்ட வாழ்வும் அதனையொட்டிய செழிப்பும் நிலை பெறு என்பதைக் காட்டு முகமாக, குளமும் மருதமரக் காவும் அமைந்து அப்பால் இடுகாடு, சுடுகாடு என்பவற்றைக் காட்டி மனிதரை சி... திக்க வைக்கும் விகடர் எ... பெருமான்.

ஆன்மாக்களின் அஞ்ஞ... ...த்தை நீக்கி அறிவுமயமா... ...ன் அருள் நெறியை பர... ...ர் எமது பெருமான். புபவ... ...சுவ காலத்தில் அவ... இவ்வுற்... ...ம்மையில், மறுமை... வணங்கி ...க்காண்போமாக... யில் இன்... ...முகனை செ... தேடிக் கய... ...யானையாகி... வில் சாடும் த... ...வினைகளையு... இவன் எம் பழ... ...து... தேடி அறுப்பான் ... இத... அவன் அடிவணங்குவ... ...வ... அனுபவபூர்வமாகப் பெ... ...ன்பதும் திண்ணம்.

சிவகுரு
வழிபடுவோர் சங்கம்

சமயங்கள் எல்லாம் போற்றும் கணபதி மானிப்பாய் மருதடியில் அருள் பாலிக்க

## அருள்வாய் ஐயா!

★★★★★★★★ ★★★★

வஞ்சனை மிகையாய்க் கொண்ட
வன்செய லாலே மக்கள்
துஞ்சிய துஞ்சுகின்ற
தொகையது நமது நாட்டிற்
கொஞ்சமே யல்ல; உண்மை;
கொடுமையிற் கொடுமை; ஐயோ!
அஞ்சியெம் மக்கள் வாழ்தல்
அழகதோ? அருள்வாய் ஐயா!

— கவியரசு
வெண்பாமணி முருகசூரியன்

[துஞ்சிய — இறந்த.
துஞ்சுகின்ற — இறக்கின்ற]
[இன்று நல்லூர்க் கைலாயபிள்ளையார் 4-ஆம்திருவிழா]

# விவசாயிகள் பாட்டாளிகளுக்கும் இலங்கை வங்கியின் சேவை

## புதிய திட்ட அங்குரார்ப்பண வைபவத்தில் உரை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 14

வர்த்தகர்கள், வியாபார ஸ்தாபனங்களை மையமாக வைத்து ஆரம்பிக்கப்பட்ட இலங்கை வங்கி தற்போது கிராமங்கள் தோறும் விவசாயிகள், சிறு கைத்தொழிலாளர்கள், அன்றாட பாட்டாளிகள் வரை தமது சேவையை விஸ்தரித்துள்ளது. அவ்வாறான சேவை விஸ்தரிப்பின் ஓர் அங்கமே இந்தப் புதிய சேமிப்புச் சான்றிதழ் திட்டம் ஆகும்.

சேமிப்புச் சான்றிதழ் திட்ட அறிமுகவிழாவில் உரையாற்றிய இலங்கை வங்கியின் பிராந்திய முகாமையாளர் திரு.க. திருநாவுக்கரசு தமது உரையில் குறிப்பிட்டார்.

பிரஸ்தாப விழா புதன் காலை 9 மணிக்கு யாழ் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள இலங்கை வங்கிக் கிளையின் முன்றலில் நடைபெற்றது.

பிராந்திய முகாமையாளர் தொடர்ந்து கூறியதாவது:-

காலத்திற்குக் காலம் புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தும் இலங்கை வங்கி, இம்முறை சேமிப்புச் சான்றிதழ் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. சேமிப்புப் பழக்கத்தைத் தூண்டி, கவர்ச்சிகரமான வட்டியை வழங்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும் — என்றார்.

இந்த வைபவத்தில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகள், யாழ். ஆயர் சார்பில் வண. செல்வராஜா அடிகள், வண. சர்வானந்தா அடிகள். இலங்கை வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் திரு.கு.துரைராஜா, வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் திரு. பி. ஜே. வின்சன்ற், செயற்பாட்டு முகாமையாளர் திரு. மு. கனகரத்தினம், யாழ். மாவட்ட முகாமையாளர் திரு. க. கணேசமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ். அரச அதிபர் வை. மு. பஞ்சலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இவ்விழாவில் ஆகக் கூடுதலான தொகையில் சேமிப்புச் சான்றிதழ்களை வாங்கியவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

நேற்று மட்டும் 150 சான்றிதழ்கள் விற்கப்பட்டன. இவற்றின் பெறுமதி 5 லட்ச ரூபாய்க்கு மேல் இருக்கும் என இலங்கை வங்கி வட்டாரங்களிலிருந்து தெரிய வந்தது. (ஒ-9)




நபிகள் (ஸல்) அவர்களது காலத்தில் இரு மனிதர்கள் இருந்தார்கள். ஒருவர் நோன்பு திறப்பதையும், மஃரிப் தொழுகையையும், தீவிரப்படுத்திக் கொள்வார் மற்றவர் நோன்பு திறப்பதையும், மஃரிப் தொழுகையையும் தாமதப்படுத்திக் கொள்வார், அப்போது யார் நோன்பு திறப்பதையும், மஃரிப் தொழுகையையும் தீவிரப்படுத்துபவர் எனக் கேட்கப்பட்டது. அதற்கு, இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் தான் எனப் பதிலளிக்கப்பட்டது. இவ்வாறேதான் முஹம்மது (ஸல்) அவர்களும் செய்து கொண்டார்கள்.

ஸஹர் முடிவு 4 - 28
நோன்புதிறக்கும் நேரம் 6 - 19

# பாகிஸ்தான் உளவாளிகளுக்கு ஆப்கனில் சிறைத்தண்டனை

இரண்டு பாகிஸ்தான் இராணுவ உளவாளிகளுக்கு காபூல் விசேட நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்தது.

ஆப்கனில் கந்தஹார் மாகாணத்தில் வைத்து இரண்டு உளவாளிகளும் கைது செய்யப்பட்டனர்.

முகமது அஷ்ரப், முகமது அப்ஸால் ஆகிய இரண்டு பேரின் மீதும் பகிரங்க விசாரணை நடத்தப்பட்டது.

ஆப்கன் கெரில்லாக்களுக்கு பாகிஸ்தான் இராணுவம் உதவுவதாகவும் ஆப்கனை பாகிஸ்தானுடன் சேர்ப்பதே பாகிஸ்தானின் திட்டம் என்றும் எதிரிகள் இருவரும் விசாரணையின் போது ஒப்புக் கொண்டனர்.

ஒருவருக்கு 18 ஆண்டுகளும் மற்றவருக்கு 16 ஆண்டுகளும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (எ)

# தக்கர் அறிக்கை வெளியான விதம் பற்றி விசாரணை!

நீதியரசர் தக்கர் விசாரணைக் கமிஷன் அறிக்கையை பத்திரிகைகளுக்கு யார் வழங்கியது பற்றி இந்திய மத்திய அரசு விசாரணை நடத்தி வருகிறது.

இத்தகவலை பிரதமர் ராஜீவ் காந்தி நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

1984 இல் இந்திரா காந்தி கொலையுண்ட சம்பவம் பற்றிய பின்னணியை ஆராய்ந்து அறிக்கை ஒன்றை தக்கர் கமிஷன் தயாரித்தது.

அரசு அந்த அறிக்கையை வெளியிடும்முன்னர் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை அதனை வெளியிட்டது. (எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உழுந்துமா

பப்படம், தோசை, வடை முதலிய தேவைக்கு பாவிக்கக் கூடிய முறையில் சுத்தமாகவும் சுகாதார முறைப்படியும் தயாரிக்கப்பட்டு விற்பனையாகின்றது.
தொகையாக ஓடர் செய்பவர்களுக்கு

★ விசேட கழிவு உண்டு. ★

பெற்றுக்கொள்ள வேண்டிய இடம்:

**அண்ணா கோப்பிக் கடை,**
யாழ்ப்பாணம்



# உதயன்

14- 04 - 1989 வெள்ளிக்கிழமை



## மிளகாய்த் தூள்

யாழ்ப்பாண முறைப்படியும் சுகாதார முறைப்படியும் தயாரிக்கப்பட்டு
★ 100 gr பக்கட்
★ 1 kg பக்கட்
★ 2 kg பக்கட் நிறைகளில்
விற்பனையாகின்றது
தொகையாக ஓடர் செய்பவர்களுக்கு
★ விசேட கழிவு உண்டு ★
பெற்றுக் கொள்ளவேண்டிய இடம்:
**அண்ணா கோப்பிக் கடை.**
யாழ்ப்பாணம்.


யாழ் மாவட்டத்திலுள்ள

# சகல பாடசாலைகளும் மே 15க்குள் கொத்தணியின் கீழ்

யாழ் மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளும் மே மாதம் 15ஆம் திகதிக்கு முன்பதாக கொத்தணி அமைப்புக்குள் கொண்டுவரப்படும்.

கடந்த புதன்கிழமை வேலணையில் கோட்டக் கல்விக் காரியாலயத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் வடக்கு-கிழக்கு மாகாண கல்விஅமைச்சின் செயலாளர் ஜனாப் எம். எம். மன்சூர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ் மாவட்ட கல்வி நிர்வாகம் பரவலாக்கப்படுவதை அடுத்து யாழ் கல்வித் திணைக்களத்தில் கடமையாற்றும் கல்வி அதிகாரிகளில் சிலர் கிளிநொச்சிக்கும் முல்லைத் தீவுக்கும் இடமாற்றம் பெறவுள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவில் இருந்து சிலர் யாழ்மாவட்டத்துக்கு இடமாற்றம் பெறுகின்றனர் எனவும் அவர் கூறினார். (ஓ-ச-119)

# 40 பல்கலைக்கழக மாணவர் ஒரே நாளில் காணமற்போயினர்

கொழும்பு. ஏப் 14

கடந்த திங்கட்கிழமை மட்டும் 40 பல்கலைக்கழக மாணவர்கள் காணமல்போய் விட்டனர் என்பது எம். பிக்களின் மனித உரிமைக் குழுவின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

குழுவின் தலைவர் திரு. தினேஷ் குணவர்த்தன இத்தகவலை வெளியிட்டார்.

இந்த நிலைமையை நீடிக்க அனுமதிக்க முடியாது என்றும் அவர் சொன்னார். [ஓ-எ]


## யாழ். பல நோ. கூ. சங்கம் - வரையுள்ளது
## வெற்றுச்சாக்கு கேள்வி அறிவித்தல்

எமது சங்கத்தில் 3348 வெற்றுச் சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்கு உண்டு. கேள்வி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் முடிவு திகதி 17 - 04 - 89 நண்பகல் 12 - 00 மணியாகும். கேள்வி விண்ணப்பங்கள் அரக்கு முத்திரை போடப்பட்டிருத்தல் வேண்டும்

பொது முகாமையாளர்.

259, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்
12 - 4 - 89

C/2263



அன்பர்கள், நண்பர்கள் ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது
**தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்**
புத்தாண்டு; ரம்ழான் சலுகையாக
**கலர்ப்படப் பிரதி 4/75**
அத்துடன் இலவசமாக (Album) அல்பம் ஒன்றும்
**குயிக் ஸ்ரார் கலர் சேவீஸ்**
(மனோகரா சந்தி)
163, நாவலர் வீதி;
யாழ்ப்பாணம்.

(10552)


## வ. பி. போ. சபை தலைவர் வாழ்த்து

யாழ்ப்பாணம், ஏப் 14

வடபிராந்திய போக்குவரத்து சபைத்தலைவர், திரு. ரி. கனகரத்தினத்தின் வாழ்த்துச் செய்தி:-

பிறக்கும் சுக்கில வருட புத்தாண்டில் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் ஊழியர்களாகிய உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் எமது வாழ்த்துக்களும் நல்லாசிகளும் உரித்தாகுக.

புதுவருடத்தில் எம மக்கள் சேவையைத் திறம்பட ஆற்றுவதற்கு உங்கள் ஒத்துழைப்பை வேண்டுவதோடு யாபேரும் சௌபாக்கியதும் பெற்று வாழ இறைவனை வேண்டுகின்றேன். [ஒ]

## மக்கள் தொண்டர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

த்தில் தைரியம் ஏற்படும் விதத்தில் மக்கள் தொண்டர் படையினர் நடந்து கொள்ள வேண்டும் என்றும் பொலீஸாருக்கு உள்ள கடமைகளும் உரிமைகளும் மக்கள் தொண்டர் படையினருக்கும் வழங்கப்படுமென்றும் தெரிவித்தார்.

வைபவ ஆரம்பத்தில் திரு. ஆனந்தராசா மக்கள் தொண்டர் படையினரின் அணிவகுப்பைப் பார்வையிட்டார். தொண்டர்களுக்கு பரிசு வழங்கும் வைபவமும் இடம் பெற்றது.

மொத்தம் 3000 பேர் வடக்கு—கிழக்கு மாகாணத்துக்கு திரட்டப்பட உள்ளனர்.

இவர்களில் ஒரு தொகுதியினரே பயிற்சி முடிந்து நேற்று வெளியேறினர். (இ]

## நேரடிப்பேச்சு......

[1 ஆம் பக்கத் தொடர் சி]

நம்புகிறேன்.

ஒருநாடு உள்நாட்டுப் பிணக்குகளினால் சீரழியும் போது வெளிநாட்டுச் சக்திகள் மாத்திரமே நன்மையடையும்என்பதை வரலாற்றுமூலம் நாம் அறிந்துகொள்ள முடியும்.

மக்கள் விடுதலை முன்னணியினருக்குத் தெரிவித்த இக் கருத்தைத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இப்படி அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன சொன்னார். (இ-எ)

# நெல்லியடியில் வேட்டுக்கள்

கரவெட்டி, ஏப்ரல் 14

நேற்று முன்தினம் (புதன் கிழமை) காலை சுமார் 11 மணியளவில் நெல்லியடியில் திடீரெனத் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இதை அடுத்து நகரப் பகுதி அல்லோலகல்லோலப்பட்டது.

நகரில் நின்ற மக்களும், தனியார் கல்வி நிறுவனம் ஒன்றின் மாணவர்கள் சிலரும் தாக்கப்பட்டார்கள் எனச் சொல்லப்பட்டது.

இச் சம்பவங்களின் போது இருவர் காயமடைந்தனர். அற்புதராசா கௌரி (வயது 14), அன்னலிங்கம் சுதாகர் (வயது 19) ஆகியோரே அந்த இருவருமாவர்.

இவர்கள் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஒ-70-160)

## வதிரியில் இளைஞர் கொலை

வல்வெட்டித்துறை, ஏப்14

கடந்த புதன்கிழமை இரவு கரவெட்டி வதிரிச் சந்தியில் வைத்து இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் விஜய் என்பவராவார். இவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் பஸ்ஸில் பயணம் செய்யும் போது சிலரால் கடத்திச் செல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ-70-160]

## திருகோணமலை...

விஜேரத்ன, அமைச்சர் ஏ. ஆர். மன்சூர், வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் திரு. நளின் செனவிரத்ன. இலங்கை இராணுவத் தளபதி ஆகியோர் கொழும்பில் இருந்து நேற்றுக் காலை திருமலைக்கு விரைந்தனர். (இ-எ)

## இளைஞன் பலி

கரவெட்டி, ஏப்ரல் 14

கடந்த புதன்கிழமை வரணி கச்சாயில் இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

சத்துரு குலசிங்கம் சிவா என அழைக்கப்படும் இவரின் சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஒ-70)

## புற்றுநோயாளர் அத்தாட்சிப் பத்திரம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 14

புற்றுநோயாளர் நிவாரணம் பெறத் தேவையான வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தை நோயாளிகள் தாம் சிகிச்சை பெற்ற அரசாங்க வைத்தியர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் எனவும் வைத்திய கலாநிதி வீ. கிருஷ்ணராஜாவிடம் மட்டும் அத்தாட்சிப் பத்திரத்தைப் பெறவேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லை எனவும் அறிவிக்கப்படுகின்றது. (க)

## சிறுவன் மரணம்

நேற்று முன்தினம் சுழிபுரம் பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்து ஒன்றில் படுகாயமடைந்து யாழ் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சி. அனந்தன் (வயது 15) என்ற சிறுவன் நேற்று மரணமானார்.

# மரண அறிவித்தல்கள்

## சிதம்பரப்பிள்ளை மகாதேவன்பிள்ளை

வியாபாரிமூலை பருத்தித்துறையைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை மகாதேவன்பிள்ளை (இளைப்பாறிய உத்தியோகத்தர் - நீர்ப்பாசன பெருந்தெருக்கள் திணைக்களம்) 12 - 04 - 89 ஆம் திகதி புதன்கிழமை சிவபதமடைந்தார். இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், கயானந்தன், கிருபானந்தன் (சவூதி), சாந்தமதி (நோர்வே), குகானந்தன், யோகானந்தன், காலம் சென்ற கோமதி, அருளானந்தன் ஆகியோரின் அன்புத் தகப்பனரும், கணபதிப்பிள்ளை (இ. ஆ. சி & சன்ஸ், லங்கா மத்திய புத்தகசாலை, கண்டி), வாசுதேவன் (உள்ளகக் கணக்காய்வாளர், விற்பனைத்திணைக்களம், யாழ்ப்பாணம்), நடராசா மங்கையற்கரசி, முருகேசு வடிவாம்பிகை, செல்லக்கண்டு கமலாதேவி (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவபாலன் (நோர்வே), பத்மாவதி, கமலாதேவியின் அருமை மாமனுருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 13 - 04 - 89 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு பருத்தித்துறை பொது மயானத்தில் நடைபெற்றதென உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:-
சி. வாசுதேவன்

[154]

## சந்திரகுலசிங்கம் சிவராசா

சந்திரகுலசிங்கம் சிவராசா (ஜெனு) அகால மரணமானார். அன்னார் வரணி திரு. திருமதி சந்திரகுலசிங்கத்தின் மகனுவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 13—4—89 வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் வரணி மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. யோகராசா

வரணி வடக்கு,
வரணி.

(10564)

## OBITUARY

## Ratnasingham - Ranee

Ratnasingham - Ranee (nee Niles) wife of the late C. R. Ratnasingham, loving mother of Suganthi (Jaffna College), Rajini (Manipay Hindu College), Lakshman (Commercial Company), and Suvendrini (St. Henry's College) mother-in-law of late R. S. Virasinghe and Lily (Lady Ridgeway Hospital) expired. Funeral will take place on Friday the 14th of April at 4-00 p. m. at Uduvil.

L. Ratnasingham

[155]


## அறிவித்தல்

புத்தாண்டு தினத்தையொட்டி 15 - 4 - 89 சனிக்கிழமை எமது அலுவலகம் மூடப்பட்டிருக்கும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு இத்தால் அறியத்தருகின்றோம்.

★ ஷப்ரு ★

207, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.

(C-2203)



சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள் !

**பாடசாலைப் புத்தகங்களும் உபகரணங்களும்**
மற்றும்
**புதிய சுக்கில வருஷ பஞ்சாங்கங்கள்**
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
**அம்மா புத்தகசாலை**
கே. கே. எஸ். வீதி, மருதனமடம்
தரமான அச்சுவேலைகளுக்கு
**AMMA PRINTING WORKS**
INUVIL - MARUTHANAMADAM





மானிப்பாய் மருதடி விநாயகரின்
**புதுவருட**
தேர் உற்சவத்தினை ஒட்டி
பெருமானின் அருள் பாலிக்க யாசிக்கின்றோம்

**மனோ அம்பிஸ் ஸ்ரோர்ஸ்**
[பான்சி கூட்ஸ்]
மானிப்பாய்.

[10562]



அன்பர்கள். ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது உள்ளம் கனிந்த
**புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!**

**கலர், லைன், போட்டோ புளக்குகளையும்**
**ரபர்சீல் பிளாஸ்ரிக்போட், கிரெக், லமினேசன் வேலைகளையும்**
**உடனுக்குடன் செய்துகொள்ள**
**ஆர்ட் கிராபிக்ஸ்**
538, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
வெளிப்புறப்படப்பிடிப்புகளும் ஏற்கப்படும்

(C/1961)



## HERE IS SOME GOOD NEWS FOR DIABETICS

Doctors recommend food prepared from **Atta Flour Whole wheat Crumbles** and **Roasted whole wheat - Samolina** for their diet as these foods contain reduced starch.

Everyone knows that medicine is only part of the treatment rest depends on the correct diet

Therefore eat meals prepared from **Atta Flour, Whole Wheat Crumbles** and **Roasted Whole Wheat Samolina.**

WITHOUT FEAR:

**ALWAYS INSIST ON THESE FOOD ITEMS**
**Prepared and Marketed.**
**BY**
**M. G. M. DISTRIBUTORS,**
279, Wolfendhall Street, Colombo - 13.

**M. G. M. & STORES**
777, K. K. S. Road, JAFFNA.

and

**M. G. M. FORAGE STORES,**
208, 1st CROSS STREET, JAFFNA.

(125)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 14 — 04 — 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.